ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






"காங்கிரஸ் கட்சி கடந்த 5 ஆண்டுகளில் ராஜஸ்தானை சீரழித்துவிட்டது"

# தாக்கு

## பெண்களுக்கு எதிரான வன்முறை, பேப்பர் லீக் மாஃபியா உள்ளிட்ட பல்வேறு சட்ட ஒழுங்கு பிரச்சினை தொடர்பாக ஆளும் அரசுக்கு பிரதமர் மோடி கண்டனம்

**ஜெய்ப்பூர், அக். 3–**

**ராஜஸ்தான் மாநில காங்கிரஸின் உட்கட்சி பூசல் தொடர்பாக மாநில முதல்வர் அசோக் கெலாட் அரசை விமர்சித்துள்ள பிரதமர் மோடி, மாநிலத்தின் பெண்களுக்கு எதிரான வன்முறை, பேப்பர் லீக் மாஃபியா உள்ளிட்ட பல்வேறு சட்ட ஒழுங்கு பிரச்சினை தொடர்பாக ஆளும் அரசைக் கண்டித்தார்.**



ராஜஸ்தான் மாநிலம் சித்தோர்கரில் நடந்த பாஜகபொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "ராஜஸ்தான் மக்களை ஏமாற்றி காங்கிரஸ் கட்சி வெற்றிகரமான ஒருஅரசை அமைத்தது. என்றாலும் அசோக் கெலாட் அரசு சரியாக செயல்பட தவறிவிட்டது. கெலாட் தனது நாற்காலியை காப்பாற்றுவதில் கவனம் செலுத்தினார். மற்ற காங்கிரஸ் தலைவர்கள் அவரது பதவியை பறிப்பதில் தீவிரம் காட்டினர். ராஜஸ்தானில் காங்கிரஸ் அரசு கடந்த 5 ஆண்டுகளில் மாநிலத்தை அழிவுக்குள் தள்ளிவிட்டது. குற்றங்களின் எண்ணிக்கை பட்டியலில் ராஜஸ்தான் முதலிடத்தில் இருப்பது எனக்கு மிகுந்த வலியைத் தருகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் பெரும்பாலானவை ராஜஸ்தானில் இருந்து வருகிறது. இதற்காகவா நீங்கள் காங்கிரஸுக்கு வாக்களித்தீர்கள்?

உதய்பூரில் என்ன நடந்தது. இப்படி நடக்கும் என்றுயாராவதுநினைத்துப் பார்த்திருப்பார்களா? அந்த கடைக்கு சிலர் துணிதைக்கவருகிறார்கள். பின்னர் டெயிலர் கண்ணையா லாலின் கழுத்தை அறுக்கிறார்கள், அந்த வீடியோவை பகிர்கிறார்கள்.ராஸ்தானில் காங்கிரஸ் ஆட்சியின் இறுதிக்கட்டம் நெருங்கிக் கொண்டிருப்பதை அசோக் கெலாட் அறிந்திருக்கிறார். அதனால் தான் மாநிலத்தில் பாஜக ஆட்சி அமைத்தபின்னரும், அவரது திட்டங்களை நிறுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறார். ராஸ்தானில் பாஜக ஆட்சி அமையும் என்று பகிரங்கமாக ஒத்துக்கொண்டதற்காக கெலாட் ஜிக்கு நான் நன்றி சொல்ல விரும்புகிறேன். எந்த ஒரு பொதுவானத் திட்டங்களும் நிறுத்தப்படாது என்று நான் உறுதி அளிக்கிறேன். அவை மேலும் மேம்படுத்தப்படும் இது மோடி ஜியின் உறுதி.

நாங்கள் ராஜஸ்தானின் இளைஞர்களுக்கு உறுதியளிக்கிறோம் நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் பேப்பர் லீக் விவகாரத்தின் அடிமட்டம் வரை விசாரணை நடத்துவோம். எளிய மக்களின் பணத்தினைக் கொள்ளையடித்த ஊழலில் ஈடுபட்ட அனைவரும் தண்டிக்கப்படுவார்கள்" இவ்வாறு பிரதமர் பேசினார்.

முன்னதாக, ராஸ்தான் மாநிலம் சித்தோர்கரில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ரூ.7,000 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அப்போது பேசிய பிரதமர், "இன்று அர்ப்பணிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் மக்களின் வாழ்க்கையை எளிதாக்குவதுடன், வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும். ராஜஸ்தானில் அதிவேகவிரைவுசாலைகள், விரைவு சாலைகள், ரயில்வே போக்குவரத்து போன்ற நவீன உள்கட்டமைப்புகளை வளர்ப்பதில் மத்திய அரசு கவனம் செலுத்துகிறது. ராஸ்தானில் கடந்தகாலத்தின் பாரம்பரியம், நிகழ்காலத்தின் வலிமை, எதிர்காலத்தின் சாத்தியக்கூறுகள் ஆகிய மூன்றும் உள்ளன. ராஜஸ்தானின் இந்த 'திரிசக்தி' நாட்டின் வலிமையை அதிகப்படுத்துகிறது" என்று தெரிவித்தார்.

ராஜஸ்தானில் பிரதமர் தொடங்கி வைத்த திட்டத்தில், ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் நத்துவாரா (ராஜ்மந்த்) வில் மேம்படுத்தப்பட்ட சுற்றுலா வளர்ச்சி, நத்துவாராவில் உள்ள சுற்றுலா விளக்கம் மற்றும் கலாச்சார மையம், கோடாவில் உள்ள இந்திய தகவல் தொழில் நுட்ப நிறுவன (ஐஐஐடி) வளாகத்தின் நிரந்தர கட்டிடம் ஆகியவைகளும் அடங்கும்.

# காந்தி ஜெயந்தி தமிழக ஆளுநர், முதல்வர் ஸ்டாலின் மரியாதை

**சென்னை , அக். 3–**



காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப் படத்துக்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

நாடு முழுவதும் உத்தமர் காந்தியடிகளின் 155–வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்படுகிறது. தமிழக அரசின் சார்பில், சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள காந்தி சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த அவரதுஉருவப்படத்துக்கு தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இதைத்தொடர்ந்து தமிழக அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, எ.வ.வேலு, ராஜ கண்ணப்பன், மா.சுப்பிரமணியன், சேகர்பாபு உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். மேலும், மகாத்மா காந்தியின் புகழைப் போற்றும் வகையில், அமைந்த பஜனைப் பாடல்களுடன் கூடிய இசை நிகழ்ச்சிகளும் ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியை தமிழக ஆளுநரும், முதல்வரும் அமர்ந்து கேட்டனர்.

காந்தி ஜெயந்தியையொட்டி, தமிழகம்முழுவதும்உள்ள பல்வேறு இடங்களில், அவரது சிலைக்கும், உருவப்படத்துக்கும் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மேலும், காந்தி ஜெயந்தி நாளான அக்டோபர் 2ம் தேதியான நேற்று, கிராம சபைக் கூட்டங்களும் நடைபெற்று வருகிறது.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நெடுவாசல் கிழக்கு ஊராட்சியில், அண்ணாநகர் முதல் ஜீவன் சாலை வரை 1.715 கிலோமீட்டர் நீளமுள்ள சாலை மேம்பாடு செய்யும் பணிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மெய்யநாதன் நேற்று அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

# இன்று நடைபெற இருந்த பாஜக ஆலோசனை கூட்டம் ஒத்திவைப்பு ?

**சென்னை , அக். 3–**

சென்னையில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை தலைமையில் இன்று நடைபெற இருந்த அக்கட்சியின் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சென்னையில், கடந்த மாதம் நடைபெற்ற அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், இனி எந்த சூழ்நிலையிலும் பாஜகவுடன் கூட்டணி இல்லை என்றும் அக்கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, ஞாயிற்றுகிழமை டெல்லி சென்றார். பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரை சந்தித்து, தமிழக அரசியல் நிலவரங்கள், அதிமுக உடனான கூட்டணி முறிவு மற்றும் என் மண் என் மக்கள் பாதயாத்திரை உள்ளிட்ட



விவரங்கள் குறித்து விளக்கியதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இன்று, சென்னையில் உள்ள பாஜக தலைமை அலுவலகமான கமலாலயத்தில், அண்ணாமலை தலைமையில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடைபெற இருந்தது. அதிமுக கூட்டணி முறிவுக்குப் பிறகு நடைபெற இருந்த இந்த ஆலோசனைக் கூட்டம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில், நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி, அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்படலாம் என்று கூறப்பட்டிருந்தது. தற்போது, அண்ணாமலை டெல்லிக்கு சென்றுள்ள நிலையில், இன்று நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக தகவல் வெளியாகி உள்ளது.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் கட்டப்பட்டுவரும் அயோத்திதாசப் பண்டிதர் மணிமண்டப கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மோகன், மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

# ஆவுடையார்கோவில் அருகே இரும்பாநாடு ஊராட்சியில் கிராம சபை கூட்டம் 150 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்பு

**ஆவுடையார்கோவில், அக்.3–**

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், இரும்பாநாடு, ஊராட்சியில் நேற்று காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபை கூட்டம் தமிழ் தாய் வாழ்த்துடன் துவங்கியது, இந்த கூட்டத்திற்கு இரும்பாநாடு ஊராட்சி மன்றத் தலைவர் முத்து தலைமை தாங்கினார்.



கூட்டத்தில் மழை நீர் சேகரிப்பு, வடகிழக்கு பருவமழையை எவ்வாறு எதிர்கொள்வது, கொசுக்கள் மூலம் பரவும் டெங்குகாய்ச்சல்பரவாமல் இருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கை, தூய்மை பாரதஇயக்கம்மூலம்திறந்த வெளியில் மலம் கழிப்பதை தவிர்த்தல், பண்ணை குட்டைகள் அமைத்தல், மானியவிலையில்விவசாய இடுபொருள்கள் உட்பட விவசாய கருவிகளை எவ்வாறு அரசிடம் இருந்து பெறுவது, ஜல் ஜீவன் திட்டம் மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் பெறுவது பற்றியும், வீடு இல்லாத அனைவருக்கும் பிரதமர் வீடு திட்டத்தில் வீடு பெறுவது, குழந்தை திருமணத்தை தவிர்த்தல், பாலியல் வன்கொடுமையை தடுத்தல், 18 வயதிற்கு கீழ் உள்ள அனைத்து குழந்தைகளும் பள்ளி சென்று படிக்க வைத்தல், வேலி கருவை மரங்களை அகற்றி ஏரி மற்றும் குளக் கரைகளில் பனை விதைகளை நடுதல்போன்றவற்றின் அவசியம்பற்றியும்பத்திற்கு மேற்பட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சிக்கு ஏம்பல் காவல் உதவி ஆய்வாளர் ராஜேந்திரன், இரும்பாநாடு ஊராட்சி துணைத் தலைவர் சாந்தி, ஐந்து வார்டு உறுப்பினர்கள். சுகாதாரத் துறையைச் சேர்ந்த அலுவலர் ரஷ்யா, அங்கன்வாடி அலுவலர் உமா, அரிமளம் யூனியன் அலுவலக அலுவலர் பாலமுரளி, இரும்பாநாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் உமாமகேஸ்வரி உட்பட 150 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், இறுதியில் இரு மாநாடு ஊராட்சி எழுத்தர் குமாரராஜா அனைவருக்கும் நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நேற்று கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, முனசந்தை ஊராட்சிமன்றத் தலைவர் சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# இன்று

3-10-23

கார்த்திகை விரதம் · கரிநாள்



| | | | |
|---|---|---|---|
| சோபகிருது புரட்டாசி 16 | OCT - TUE செவ்வாய் | ரபீஉல் அவ்வல் 17 | இராசிபலன் |
| | | தேய்பிறை 276 / 089 | |

தேய். சதுர்த்தி 11.10 (கா. 10.30) கார்த்திகை 42.18 (மா.10.57) தியாஜ் 12.26 அகஸ் 29.56 சித்த 42.18 மேல் அமிர்த. கார்த்திகை விரதம். கரிநாள்.
திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் ஆண்டாள் மூலவருக்கு திருமஞ்சன சேவை. திருப்பரங்குன்றம் ஆண்டவர் புறப்பாடு.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 1.45-2.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; கன்னியா லக்கனம் இருப்பு நா. 2 வி. 30; சந்திராஷ்டமம் ஹஸ்தம் சித்திரை; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.04

இராசிபலன்: மேஷம் - மகிழ்ச்சி; ரிஷபம் - அசதி; மிதுனம் - அமைதி; கடகம் - பரிசு; சிம்மம் - புகழ்; கன்னி - சோதனை; துலாம் - பிரீதி; விருச்சி - நலம்; தனுசு - நன்மை; மகரம் - மேன்மை; கும்பம் - களிப்பு; மீனம் - சோர்வு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்




புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை- 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,390 | Rs. 5,860 |


# செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் கிராம சபா கூட்டம்



திருவிடைக்கழி ஊராட்சியில் கிராம சபை கூட்டம்



எடுத்துகாட்டி சாத்தனூர் ஊராட்சி கிராமசபை கூட்டம்

**செம்பனார்கோவில், அக்- 03:**

மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி காந்தி ஜெயந்தி தினமாக அனுசரிக்கப்படுகிறது. காந்தி ஜெயந்தி தினத்தை ஒட்டி மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோவில் ஒன்றியத்துக்குட்பட்ட எடத்துக்கட்டி சாத்தனூர், திருவிடைக்கழி, தில்லையாடி, டீ.மணல்மேடு, திருக்கடையூர், ஆக்கூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் கிராம சபா கூட்டம் நடைபெற்றது.

எடுத்துக்கட்டி சாத்தனூர் ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் கிராம சபா கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் பைலட் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற துணைத் தலைவர் விஜய், கால்நடை மருத்துவர் சிவரஞ்சனி, பொறையார் காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசுப்பிரமணியன், ஊராட்சி ஒன்றிய செயலாளர் குமரயன் மற்றும் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் பல்வேறு துறை அலுவலர்கள் பொதுமக்கள் பங்கேற்றனர்.

திருவிடைக்கழி ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா நாகராஜன் தலைமையில் கிராம சபா கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அன்பழகன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருநாவுக்கரசு, ஊராட்சி செயலாளர் மதியழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் வார்டு கவுன்சிலர்கள் வார்டு உறுப்பினர்கள் கிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தில்லையாடி ஊராட்சியில் தியாகி வள்ளியம்மை நினைவு மண்டபத்தில் ஊராட்சி மன்ற தலைவர் ரெங்கராஜன் தலைமையில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில். துணைத் தலைவர் அனுசியா சஞ்சய் காந்தி, ஒன்றிய கவுன்சிலர் ஜெயந்தி கார்த்திக், மருத்துவர் சரத்குமார், கிராம நிர்வாக அலுவலர் அருணா, ஊராட்சி செயலாளர் செல்வராணி, பொதுநல சங்க தலைவர் துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக தியாகி வள்ளியம்மை நினைவு மண்டபத்தில் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது முக்கியமாக மயிலாடுதுறை தரங்கம்பாடி தொடர்வண்டி சேவை தொடங்கப்பட வேண்டும் என்று ஊராட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

டீ மணல்மேடு ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் திலகவதி துரைராஜ் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் துணைத் தலைவர் பாக்யராஜ், தலைமை ஆசிரியர் ஜெயந்தி, செவிலியர் சத்யா, நூலகர் நாராயணசாமி, ஊராட்சி செயலாளர் செல்வி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் சுடுகாடு சாலை அமைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் வார்டு உறுப்பினர்கள், ஒன்றிய கவுன்சிலர் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஆக்கூர் ஊராட்சியில் பஞ்சாகை கிராமத்தில் கிராம சபா கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரமோகன் தலைமையில் நடைபெற்றது ஒன்றிய கவுன்சிலர் சாந்தி வேல்முருகன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சிவா ஊராட்சி செயலாளர் ஊராட்சி அலுவலர்கள் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் பல்வேறு துறை அலுவலர்கள் ஏராளமான கிராம பொதுமக்கள் பங்கேற்றனர் கூட்டத்தில் ஊராட்சி வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஊராட்சி மன்ற தலைவர் எடுத்துரைத்தார் மேலும் பல்வேறு சிறப்பு தீர்மானங்கள் போடப்பட்டது குறிப்பாக ஆக்கூர் ஊராட்சியில் சத்தியவாணன் வாய்க்காலில் மயிலாடுதுறையில் இருந்து வரும் கழிவு நீரால் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகவும் நான்கு வழி சாலை பணிக்காக வாய்க்கால் அடைக்கப்பட்டுள்ளதால் கழிவுநீர் வெளியே செல்லாமல் தேங்கி நிற்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் சத்தியவாணன் வாய்க்காலில் கழிவு நீரை முற்றிலுமாக அப்புறப்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க தீர்மானம் போடப்பட்டது.

கிராம சபை கூட்டங்களில் நடைபெற்ற ஊராட்சிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்தும் ஊராட்சி வரவு செலவு கணக்குகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டது.

# சீர்காழி அருகே திருவெண்காடு ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டம்

## அமைச்சர் மெய்யநாதன், மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்பு



சீர்காழி , அக்.3-

சீர்காழி அருகே திருவெண்காடு ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் அமைச்சர் மெய்யநாதன், மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்பு.

காந்தி ஜெயந்தியை முன்னிட்டுமயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருவெண்காடு ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, அமைச்சர் மெய்யநாதன், பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழக அரசின் மகளிர் உரிமைத்திட்டம், கிராம சபை கூட்டம் தொடர்பாக முதல்வர் பேசும் காணொலியை தொடர்ந்து கிராம சபை கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டது.

கிராம சபை கூட்டத்தில் கிராமமக்கள் பங்கேற்று திருவெண்காடு மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறையாக உள்ளதாகவும், பெருந்தோட்டம் ஏரியை சுற்றுலா தளமாக ஆக்க வேண்டும், மயிலாடுதுறை மாவட்டத்திற்கான மருத்துவ கல்லூரியை திருவெண்காட்டில் அமைக்கவேண்டும், அரசு உயர் நிலைப்பள்ளியை மேல் நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மேற்கண்ட கோரிக்கைகள் குறித்து உடனடியாக உரிய நடவடிக்கைஎடுக்கப்படும் என அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் உறுதி அளித்தனர். முன்னதாக உழவர் நலத்துறைசார்பாக நெல் ரகங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் உள்ளிட்டவைகள் காட்சிபடுத்தப்பட்டது.

அங்கன்வாடி பணியாளர்கள் சார்பில் சத்தான உணவு காய்கறிகளில் உள்ளது என்பதை உணர்த்தும் வகையில் காய்கறிகள் உள்ளிட்ட பொருட்கள் காட்சிப்டுத்தப்பட்டது. கூட்டத்தில் பேசிய அமைச்சர் மெய்யநாதன் 100 நாள் வேலை திட்டத்தில் நாட்கள் அதிகப்படுத்தப்படும், டெங்கு பரவாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும். திருவெண்காடு அரசு மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும், பெருந்தோட்டம் ஏரியை சுற்றுலாத்தலமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். கலைஞர் உரிமைத்தொகை விடுபட்டவர்கள் மீண்டும் வார்டு உறுப்பினர்கள் மூலம் விண்ணப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437



காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் செய்தி மற்றும் விளம்பரத்துறை சார்பாக பெருந்தலைவர் காமராஜர் நினைவு தினம் நேற்று அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. அவ்வமயம் காமராஜர் சாலையில் உள்ள அம்மாள் சத்திரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். மேலும் இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) சுபாஷ் காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணியன் துணை மாவட்ட ஆட்சியர் வெங்கடகிருஷ்ணன் செய்தி மற்றும் விளம்பரத் துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) குலசேகரன் மற்றும் அரசு அதிகாரிகள் காவல்துறை அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்..

# சென்னை திருவொற்றியூரில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் ஒரிஜினல் கொசு மருந்து அடிக்க வேண்டும் காங்கிரஸ் பிரமுகர் ஆதங்கம்

## பால்டாயில் கலந்து தான் அடிக்க வேண்டும் மண்டல குழு தலைவர் நகைச்சுவை



திருவொற்றியூர், அக்.3-

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் கிராம சபை கூட்டங்கள் நடைபெற்று வருகிறது திருவொற்றியூர் மாநகராட்சி 1வது மண்டலம் பத்தாவது வார்டு நேதாஜி நகர் பகுதியில் வழக்கறிஞர் பொன்னிவளவன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மண்டல குழு தலைவர் தி.மு தனியரசு தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

இதில் நேதாஜி நகர், சடையம் குப்பம் பாட்டை, ராஜீவ் நகர், திரு. வி.கா. நகர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 100 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்று தங்கள் குறைகளை அடுக்கடுக்காக முன் வைத்தனர், குடிநீர் பிரச்சனை, மின்சார பிரச்சினை, சாலை பிரச்சனை, கொசுக்கள் உற்பத்தியால் தொற்று நோய்கள் ஏற்படுவதாகவும் என அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் முன் வைத்தனர்.

திரு வி க நகர் பகுதியில் கொசு மருந்து தரமானதாக அடிக்கவில்லை கொசு மருந்து அடித்து சென்றாலும் கொசுக்கள் சாகவில்லை என்றும் கொசுக்கள் உற்பத்தி அதிகமாக இருப்பதனால் டெங்கு நோய்கள் பரவுமா என்ற அச்சம் இருப்பதாகவும் தரமான ஒரிஜினல் கொசு மருந்து அடிக்க வேண்டும் என அப்பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர் சங்கரலிங்கம் கோரிக்கை வைத்தார்.

இதற்கு பதில் அளித்த மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு ஒரிஜினல் கொசு மருந்து என்றால் வடிவேலு பாணியில் பால்டாய்ல் கலந்து அடிக்க வேண்டும் என்று நகைச்சுவை உடன் கூறினார் இதனால் கூட்டத்தில் சிரிப்பலை எழுந்தது ஆய்வகத்துக்கு சென்று ஆய்வு செய்த பின்பு கொசு மருந்து அடிப்பதாகவும் மருந்து கலந்து அடித்தால் தான் எவ்வித மூச்சுத்தினரல் ஏற்படாது என்றும் குழந்தைகள் பெரியவர்கள் இருப்பதனால் மருந்து கலந்து அளிப்பதாகவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஆர். எஸ்.சம்பத், 10வது வட்ட செயலாளர் எஸ்.தமிழ் செல்வன், துணை செயலாளர் மோகன், முரளி மனோகர், வட்ட பிரிதிநிதி பாலாஜி, ராஜேந்திரன், கணேஷ் குமார், சுகுமார் மற்றும் அனைத்து நகர் நிர்வாகிகள் தலைவர் செயலாளர் பொருளாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# எல்லாபுரம் ஒன்றியத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டங்களை நம்ம ஊரு கிராம சபை ஆப்-ல் பதிவேற்றம் செய்ய இயலாமல் ஊராட்சி செயலர்கள் திண்டாடினர்





ஊத்துக்கோட்டை, அக்3-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் ஊராட்சிமன்ற வளாகத்தில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு ஊராட்சிமன்ற தலைவர் லட்சுமிதிருமலை தலைமை தாங்கினார்.துணைத் தலைவர் மகேஷ்,ஒன்றிய குழு உறுப்பினர் கோகிலா,வார்டு உறுப்பினர்கள் பத்மாவதி, சித்ரா, பவானிராஜா,பாபு, எழிலரசு, நஷீலா, பூங்கொடி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பற்றாளராக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜசேகர் கலந்து கொண்டார். இதில்,சிறப்பு அழைப்பாளராக எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) சத்தியமூர்த்தி கலந்து கொண்டார். இக்கூட்டத்தில், அம்பேத்கார் நகரில் உள்ள சுடுகாட்டை சீரமைத்து,சாலை வசதி,கல்வெர்ட் (சிறு பாலம்) வசதி உள்ளிட்டவைகளை மேற்கொள்ளுவது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

வடமதுரை ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் காயத்ரிகோதண்டன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் பாக்கியலட்சுமிரமேஷ், ஒன்றிய குழு உறுப்பினர் ஜமுனா அப்புன், வார்டு உறுப்பினர்கள் ஜெய்புனாசுக்ரேசன், வைஷாலிபாலாஜி, தாமரைக்கனி தமிழ்மன்னன், திவ்யாராஜீவ்காந்தி, சுப்புலட்சுமி தீபன்சக்கரவர்த்தி,ரமேஷ்,சேட்டு, கிரிஜாவிஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பற்றாளராக மண்டல துணி வட்டார வளர்ச்சி அலுவலர் கிரிஜா கலந்து கொண்டார். மன்ற பொருட்களை ஊராட்சி செயலர் ஏழுமலை வாசித்தார். முடிவில்,கருணாகரன் நன்றி கூறினார்.

82,பனப்பாக்கம் ஊராட்சியின் கிராம சபை கூட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, ஊராட்சி மன்ற தலைவர் முரளிதரன் தலைமை தாங்கினார்.துணை தலைவர் பேபிஞானபிரகாஷ், வார்டு உறுப்பினர்கள் ரேகாதாஸ், செல்வகுமார்,தாமோதரன், கார்த்திகேயன், ஜோதிலட்சுமிஜெகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மன்ற பொருட்களை ஊராட்சி செயலர் ஆர். குமரவேல் வாசித்தார். முடிவில், கலைவாணி நன்றி கூறினார்.

திருக்கண்டலம் ஊராட்சி கிராம சபை கூட்டம் மன்றவளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஊராட்சிமன்ற தலைவர் மதன்சத்யராஜ் தலைமை தாங்கினார்.துணைத் தலைவர் லிங்கதுரை,ஒன்றிய குழு உறுப்பினர் ரவி,வார்டு உறுப்பினர்கள் நதியாகுடியரசு,சுமதிசேகர், இறையரசு,வினோத்குமார், ராஜேஸ்வரிஆனந்தன், துர்காவிஜயகுமார்,ராஜேந்திரன், துர்காராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பற்றாளராக சத்துணவு அமைப்பாளர் சிவா கலந்து கொண்டார்.மன்ற பொருட்களை ஊராட்சிசெயலர் ஆர்.உமாநாத் வாசித்தார்.முடிவில்,காஞ்சனா நன்றி கூறினார்.

வெங்கல் ஊராட்சியின் கிராமசபை கூட்டம் வெங்கல்குப்பம் கிராமத்தில் உள்ள நியாயவிலை கடை அருகே நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, ஊராட்சிமன்ற தலைவர் சுகந்திராணிலிங்கன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் கணபதி, ஒன்றிய குழு உறுப்பினர் திருமலைசிவசங்கர்,வார்டு உறுப்பினர்கள் புவனேஸ்வரிபாலு, மல்லீஸ்வரிநாகேஸ்வரராவ், சீனிவாசன், வசந்தா அருணாசலம், காஞ்சனா பாரத்கண்ணன், வசந்திவீரஜீன், கோடீஸ்வரன ,தன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மன்ற பொருட்களை ஊராட்சி செயலர் உமாபதி வாசித்தார். முடிவில்,அலமேலு நன்றி கூறினார்.

கன்னிகைப்பேர் ஊராட்சியின் கிராமசபைகூட்டம் ஊராட்சிமன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, ஊராட்சிமன்ற தலைவர் காயத்ரிஉதயகுமார் தலைமை தாங்கினார்.துணைத் தலைவர் மேனகாசுப்பிரமணி, ஒன்றிய குழு உறுப்பினர் ஜெயலட்சுமிகுமார்,வார்டு உறுப்பினர்கள் சுரேஷ், ஜெயலட்சுமிசெந்தில், உமாவினோத், இந்திராபாஸ்கர், தணிகாசலம், சரசுவெங்கடேசன், செல்வகுமார்,திவ்யாவைரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பற்றாளராக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கார்த்திக் கலந்து கொண்டார். மன்ற பொருட்களை ஊராட்சி செயலர் பொன்னரசு வாசித்தார். முடிவில்,ஜூலியட் தங்கமணி நன்றி கூறினார்.

ஆலப்பாக்கம் ஊராட்சியின் கிராமசபை கூட்டம் ஊராட்சிமன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு,ஊராட்சிமன்ற தலைவர் பிரமிளாஆறுமுகம் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் செல்வம், ஒன்றியகுழு உறுப்பினர் ஜெயலட்சுமிகுமார்,வார்டு உறுப்பினர்கள் மோகன், கர்ணம்மாள், ஹரிபாபு, ஜமுனா,கல்பனா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி செயலர் பிரபாகரன் மன்ற பொருட்களை வாசித்தார். நடைபெற்ற இக்கூட்டங்களில் அரசின் திட்டப்பணிகள் குறித்தும், ஊராட்சியின் பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும், ஊராட்சிமன்ற கூட்டம் குறித்து தகவல்களையும், புகைப்படங்களையும் பதிவேற்றம் செய்ய ஊராட்சி மன்றத்தில் உள்ள ஊராட்சி செயலர்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில் நம்ம ஊரு கிராம சபை என்ற ஆப் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் பதிவேற்றம் செய்ய இயலாமல் ஊராட்சி செயலர்கள் நீண்ட நேரமாக திண்டாடினர். இதனால் பதட்டமும்,பரபரப்பு ஏற்பட்டது.

# சீர்காழி சட்டநாதர் கோவிலில் தமிழக முதல்வரின் மகள் சுவாமி தரிசனம் செய்தார்



சீர்காழி , அக்.3-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான திருநிலை நாயகி அம்பாள் உடனாகிய பிரம்மபுரீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது.

தேவாரப் பாடல் பெற்ற மலை கோவிலான இங்கு சிவபெருமான் மூன்று நிலைகளில் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். மேலும் தேவார நால்வர்களுள் திருஞானசம்பந்தர் அவதார ஸ்தலமான இக்கோவிலில் காசிக்கு இணையான அஷ்ட பைரவர்கள் தனி சன்னதியில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க கோவிலுக்கு இன்று தமிழக முதல்வர் ஸ்டாலின் மகள் செந்தாமரை வந்தார் அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது தொடர்ந்து கோவிலுக்குள் சென்றசெந்தாமரை சுவாமி அம்பாள் சட்டநாதர் மற்றும் அஷ்ட பைரவர் சன்னதிகளுக்கு சென்று சிறப்பு வழிபாடு செய்தார்.

தொடர்ந்து அவருக்கு சிவாச்சாரியார்கள் கோவில் பிரசாதங்களை வழங்கினர்.

03.10.2023 ❖ வரலாறு

### சீர்காழியில் உள்ள தனியார் நகைக்கடன் நிதி நிறுவனத்தில்

# அடகு வைத்த நகைக்கு போலியாக ரசீது செய்து கூடுதலாக பணத்தை எடுத்த 3 ஊழியர்கள் கைது



சீர்காழி,அக்.3

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தனியார் நிதி நிறுவனம் (மணப்புரம் பைனான்ஸ்) செயல்பட்டு வருகிறது. இந்த நிதி நிறுவனத்தில் சீர்காழி மட்டுமல்லாமல் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த வாடிக்கையாளர்கள் அதிக எண்ணிக்கையில் தங்களது நகைகளை அடகு வைத்து கடன் பெற்றுள்ளனர்.

வாடிக்கையாளர்களிடம் நகைகளை பெற்றுக் கொண்டு அவர்கள் கேட்கும் பணத்தை கொடுக்கும் நிதி நிறுவன ஊழியர்கள் அதற்கான ரசீதுகளை கொடுக்கவில்லை. இதுகுறித்து வாடிக்கையாளர்கள் கேட்கும் போது கம்ப்யூட்டர் பழுது, கரண்ட் இல்லை என்பது போன்ற காரணங்களை சொல்லிதட்டிக்கழித்துள்ளனர்.

இதனால் சந்தேகப்பட்ட சில வாடிக்கையாளர்கள் தாங்கள் பெற்ற கடன் தொகையை செலுத்தி நகையை கேட்ட போது ஊழியர்கள் உடனடியாக நகையை கொடுக்கவில்லை. இதனால் அடிக்கடி வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனால் அதிர்ச்சி அடைந்த வாடிக்கையாளர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் நிதி நிறுவன தலைமை நிர்வாகி பிரமோத்குமார் கணக்கு வழக்குகளை தணிக்கை செய்துள்ளார். அதில் நகை கடன் பெற்ற 41 நபர்களின் கணக்குகளில் கடன் தொகைக்கு கூடுதலான தொகையை வாடிக்கையாளர்கள் பெற்றதுபோல் போலியாக ரசீது தயார் செய்து ரூபாய் 7 லட்சமும், நகைகடை உரிமையாளர் ரேணுஜெயின் தினேஷ்குமார் என்பவர் பெயரில் நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்ட 9 பாக்கெட் நகைகளை எந்தவித மீட்பு ரசீதும் இல்லாமல் 9 லட்சம் மதிப்புள்ள நகைகள் உள்ளிட்ட 16 லட்சம் வரை பணமோசடி செய்துள்ளதை கண்டறியப்பட்டது.

இதனால் அதிர்ச்சியடைந்த நிறுவனத்தின் மேனேஜர் பிரமோத்குமார் மாவட்ட குற்றப்பிரிவு போலீசில் அளித்த புகாரின் பேரில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் தனியார் நிதி நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் மயிலாடுதுறை மறையூரை சேர்ந்த பாபுராஜ் (23), சீர்காழி ரயில்வே காலனியை சேர்ந்த ரிஷிபாலன் (25), கொண்டல் கிராமத்தைச் சேர்ந்த இளவரசன் (24) ஆகிய 3 பேர் இந்த மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது.

வாடிக்கையாளர்கள் அடகு வைத்து கேட்கும் தொகையை கொடுத்துவிட்டு அந்த நகைக்கு கூடுதல் தொகையை கணக்கு காட்டி அதில் கிடைக்கும் கூடுதல் தொகையை ஊழியர்கள் பங்கு போட்டு மோசடி செய்திருப்பது தெரியவந்தது.

இதனை அடுத்து நான்கு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் நிதி நிறுவன ஊழியர்கள் 3 பேரையும் கைது செய்து நாகை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நாகை சிறையில் அடைத்தனர். சீர்காழியில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் வாடிக்கையாளர்கள் நம்பிக்கையுடன் நகைகளை அடகு வைத்து கடன் பெற்ற நிலையில் ஊழியர்கள் மோசடியில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



▶ காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் வட்டார வளர்ச்சி துறை இணைந்து தேசப்பிதா மகாத்மா காந்தி பிறந்த தினம் நேற்று.மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. வட்டார வளர்ச்சி துறை அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட அன்னாரின் திருவுருவப் படத்திற்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமை ஏற்று கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். பிறகு மும்மதப் பிரார்த்தனை வாசிக்கப்பட்டது. மேலும் தேச பக்தி பாடல்கள் இசைக்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) சுபாஷ் துணை மாவட்ட ஆட்சியர் வெங்கடகிருஷ்ணன் காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணியன் இனை வட்டார வளர்ச்சி அதிகாரி ரங்கநாதன் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.



▶ சென்னை மேலக்கோட்டை பிரசாந்தி முதியோர் நல்வாழ்வு இல்லத்தில் காந்தி ஜெயந்தி , முதியோர் தினத்தில் நடைபெற்ற விழாவில் , நடிகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்வி சேகர் கலந்து கொண்டு, முதியவர்களுக்கு, மதிய உணவு, இனிப்புக்கள், பழம்,பிஸ்கட் வழங்கினார். அருகில் நிர்வாகி ராஜகோபால் பாலாஜி, டிரஸ்டி காயத்திரி.


# சென்னை திருவொற்றியூரில் இளைஞரை கொலை செய்த வழக்கில் இருவர் கைது

சென்னை,அக்.3

சென்னை மணலியை சேர்ந்த ஜோதீஸ்வரன் இவர் நேற்று முன் தினம் இரவு தனது நண்பனை பார்ப்பதற்காக திருவொற்றியூர் பட்டினத்தார் கோவில் குழப்பத்திற்கு வந்துள்ளார்.

அப்போது கடற்கரையில் பகுதியில் நண்பர்களுடன் மது அருந்திய ஜோதிஸ்வரன் அருகில் மது குடித்து கொண்டு இருந்த இளைஞர்களிடம் தகராறில் ஈடுபட்டு நீ யார் என்று கேட்டுள்ளார். அப்போது குடிபோதையில் இருந்த அபினேஷை ஜோதிஸ்வரன் தாக்கியதாக கூறப்படுகின்றது.

இதனால் ஆத்திரமடைந்த அபினேஷ் தனது வீட்டில் இருந்த கத்தியை எடுத்து கொண்டு மதுபோதையில் கடற்கரை பகுதியில் படுத்து இருந்த ஜோதிஸ்வரனை ஓட ஓட விரட்டிச் சென்று தலை மற்றும் கை பகுதியில் கத்தியால் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளான்.



▶ ஜோதிஸ்வரன் (இறந்தவன்) ▶ கொலை குற்றவாளிகள் சுனில், அபினேஷ்

தலை மற்றும் கை பகுதியில் இளைஞர் வெட்டுப்பட்டு உயிரிழந்த இருப்பதாக திருவொற்றியூர் போலீசாருக்கு மீனவ மக்கள் தகவல் தெரிவித்தனர் தகவலின் பெயரில் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற திருவொற்றியூர் போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்

சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீஸ் சார் வழக்கு பதிவு செய்து திருவொற்றியூர் உதவிய ஆணையர் தலைமையில் தனிப்படை உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு திருவொற்றியூர் கடற்கரைப் பகுதியில் பதுங்கி இருந்த அபினேஷ்(20) , கொலைக்கு உடந்தையாக இருந்த சுனில் (21) ஆகிய இருவரை கைது செய்து அவர்களிடமிருந்து ஒரு கத்தியை பறிமுதல் செய்து காவல் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# நாடாளுமன்றத் தேர்தல் புறக்கணிக்க போவதாக அறிவிப்பு



▶ புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஆர். பாலகுறிச்சி ஊராட்சியில் நேற்று நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் தங்கள் ஊராட்சி புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் பல்வேறு நிர்வாக சிக்கலில் சிக்கி தவித்து வருவதால் ஏதாவது ஒரு மாவட்டத்தில் முழுமையாக தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும் 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலை மிகவும் மோசமாக இருப்பதால் அதை பயன்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது அடிப்படை வசதிகளை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும் இல்லையெனில் அடுத்தாண்டு நடைபெறக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலை புறக்கணிப்போம் என்று ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ரெஜினா பேகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

### மகாத்மா காந்தியின் 154 ஆவது பிறந்த தினம் காங்கிரஸ் கட்சி சார்பில்

# மகாத்மா காந்தியின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை



காரைக்கால்,அக்.3

தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 154 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி காரைக்கால் காமராஜர் சாலையில் அமைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் திருவுருவப்படத்திற்கு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ஏ.வி. சுப்பிரமணியன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் ஆர்.பி.சந்திரமோகன், மாநிலத் துணைத் தலைவர் பஷீர், தெற்குத் தொகுதி தலைவர் முஜிப் ரஹ்மான், மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரஞ்சித் உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டு மகாத்மா காந்தியின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



▶ புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி இலக்கிய பேரவை சார்பில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் தமிழ் பாடத்தில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ,மாணவியர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இலக்கிய பேரவை தலைவர் முத்து தலைமை வகித்தார். செயலாளர் பாபுஜான் வரவேற்றார். கௌரவ தலைவர் கருப்பையா, ஆலோசகர் ராஜசேகர், துணைச் செயலாளர் வின்சென்ட் ஆகியோர் முன்னிலை வகித்தனர், மாணவ மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பேராசிரியர் பாலசுப்பிரமணியம் சிறப்புரையாற்றினார், இலக்கிய பேரவை பொருளாளர் கருணாகரன் நன்றி கூறினார்.

### காரைக்கால் அடுத்த திருநள்ளாறில் தனியார் காதி நிறுவனத்தில்

# காந்தி ஜெயந்தியையொட்டி 1ரூபாய்க்கு வேட்டி வழங்கியதால் அலைமோதிய கூட்டம்



திருநள்ளார்,அக்.3

காரைக்கால் அடுத்த திருநள்ளாறில் காவல் நிலையம் எதிரில் தனியார் காதி நிறுவனம் இயங்கி வருகிறது. காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கதர் ஆடைகளை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஒரு ரூபாய்க்கு வேட்டி விற்பனை எனவும், முதலில் வரும் 200 நபர்களுக்கு மட்டும் தான் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

விற்பனை துவங்கியதும் திருநள்ளாறு பகுதி மக்களுடன் கோவிலுக்கு வந்த வெளி மாநில பக்தர்கள், சுற்றுலா பயணிகள் என வேட்டி வாங்க அங்கு குவிந்தனர். இதனால் அக்கடையில் கூட்டம் அலைமோதியது. 30 நிமிடத்திலேயே 200 வேட்டிகள் விற்றுத் தீர்ந்தது. முன்னதாக மகாத்மா காந்தியின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இக்கடையில் கடந்த ஆண்டும் காந்தி ஜெயந்தி அன்று இதுபோன்று ஒரு ரூபாய்க்கு வேட்டி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கடுகப்பட்டு ஊராட்சியில் கிராம சபை கூட்டத்தை புறக்கணித்த கிராம பொதுமக்கள்



செய்யூர், அக். 3–

செங்கல்பட்டு மாவட்டம்,செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கடுகப்பட்டு ஊராட்சியில் காந்தி ஜெயந்தி அன்று கிராம சபை கூட்டம் நடைபெற்றது.அக்கூட்டத்தில் வரவு - செலவு கணக்குகள் காண்பிக்கப்படவில்லை.

ஆனால் அரசாங்கம் பொதுமக்களுக்கு முறையான கிராம சபை கூட்டம் நடத்த வேண்டி பலமுறை அரசாணைகள் வெளியிட்டும் அதனை மதிக்காமல் கடுகப்பட்டு ஊராட்சியில் வெறும் கண் துடைப்புக்காக மட்டுமே கிராம சபை கூட்டம் நடத்தப்படுகிறது.

மேலும் கிராம சபை கூட்டம் அறிவிப்பினை ஏழு நாட்களுக்கு முன்பு துண்டு பிரசுரம் கொடுப்பதில்லை, பல ஆண்டுகளாக வரவு செலவு கணக்குகள் கிராம சபையில் பொதுமக்கள் பார்வைக்கு காண்பிக்கப்படுவது கிடையாது.

இதனை அரசு அதிகாரிகளிடம் மனுக்கள் மூலமாக தெரிவித்தாலும், நேரில் சென்று தெரிவித்தாலும் எந்த நடவடிக்கையும் இதனால் வரை எடுக்கப்படவில்லை. மேலும் கிராம சபை கூட்டத்தில் வரவு - செலவு கணக்கு காண்பிக்காமல் கூட்டம் நடத்துவது அரசாங்கம் வழங்கக்கூடிய தொகை அனைத்தும் வீணடிக்கும் வகையில் உள்ளது.

எனவே இவ்வாறு புகார்கள் தெரிவித்த பொதுமக்கள் கூறுவதாவது வரவு - செலவு கணக்கு காண்பிக்காமல் கிராம சபை கூட்டத்தை முடிக்க துடிக்கும் அரசு அதிகாரிகள் மீதும், ஊராட்சி நிர்வாகம் மீதும் துறை ரீதியான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம பொதுமக்கள் இந்த கிராம சபை கூட்டத்தினை ஒன்று கூடி புறக்கணித்தனர்.

மேலும் இந்த கிராம சபை கூட்டத்தை மறு தேதி அறிவித்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் நடத்த வேண்டும் என்று கடுகப்பட்டு கிராம பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# குன்னூர் பேருந்து விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு நிவாரண தொகை திமுக தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் வழங்கினார்



*தென்காசி,அக்.3–*

*நீலகிரி மாவட்டம் குன்னூரில், தென்காசி மாவட்டம் கடையம் பகுதியை சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் சுற்றுலா சென்று திரும்பிய போது எதிர்பாராத விதமாக பேருந்து விபத்தில் சிக்கி 20 அடி பள்ளத்தில் விழுந்தது. அப்போது அந்த விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். அதில் 8 பேர் தென்காசி மாவட்டம், கடையம் பகுதியை சேர்ந்தவர்கள் அவர்களது உடல் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்ட நிலையில் நேற்று அவர்களது வீட்டிற்கு தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் நேரில் சென்று தலா பத்தாயிரம் வீதம் என்பதாயிரம் வழங்கி ஆறுதல் கூறினார்.*

*இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் செல்லத்துரை ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்குமார், மகேஷ் மாயவன், மாவட்டத் துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன், ஒன்றிய கவுன்சிலர் ரம்யா ராம்குமார் மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் அற்புதராஜ், கிளைச் செயலாளர் துரைராஜ், சசிகுமார், அர்ச்சுனன், சுரேஷ் மோகன், ரமேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

# அடுத்தடுத்து போராட்டங்களை முன்னெடுக்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் தமிழக அரசு நிரந்தர தீர்வு காணுமா?

சென்னை , அக். 3–

அரசுப் பள்ளி ஆசிரியர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருவதால் மாணவர்கள் கல்வி பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே, ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கைகளுக்கு தமிழக அரசு விரைந்து தீர்வு காண கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சமீபகாலமாக தமிழக பள்ளிக்கல்வித் துறைக்கு எதிராக அரசுப் பள்ளி ஆசிரியர் சங்கங்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. பழைய ஒய்வூதியத் திட்டம், ஊதிய சமநிலை, பணப்பலன்கள், எமிஸ் பணிகளை குறைத்தல் உள்ளிட்டவை அவர்களின் பிரதான கோரிக்கைகளாக முன்வைக்கப்படுகின்றன. அந்தவகையில் பள்ளிக்கல்வி இயக்குநரகத்தின் தலைமை அலுவலகமான டிபிஐ வளாகமே தற்போது போராட்டக் களமாக மாறியுள்ளது.



ஒருபுறம் சம வேலைக்கு சம ஊதியம் எனும் கோரிக்கையை முன்வைத்து ஆயிரக்கணக்கான இடைநிலை ஆசிரியர்கள் தங்கள் குடும்பத்தினருடன் தொடர்ந்து 4 நாட்களாக உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் 150–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மயக்கமுற்று சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல், பணிநிரந்தரம் கோரிக்கையை வலியுறுத்தி பகுதிநேர ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களை சேர்ந்த 3 சங்கங்களும், பதிவுமூப்பு அடிப்படையில் பணிநியமனம் உட்பட கோரிக்கைகளை வலியுறுத்தி 2013–ல் டெட் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும் டிபிஐ வளாகத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் அரசு தரப்பில் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும் சுமூக முடிவு எட்டப்படவில்லை.

மேலும், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, டெட் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் நலச் சங்கம், புதிய ஒய்வூதியத் திட்ட (சிபிஎஸ்) ஒழிப்பு இயக்கம் உட்பட பல்வேறு அமைப்புகள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒருநாள் அடையாளப் போராட்டத்தை நடத்தின.

இதுதவிர தொடக்கக் கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (டிட்டோஜேக்) தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு உட்பட பல சங்கங்களும் அடுத்தடுத்து தொடர் போராட்டங்களை அறிவிப்புகளை வெளியிட்டு வருவது பள்ளிக்கல்வித் துறைக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், காலாண்டு விடுமுறை முடிந்து 6 முதல் 12–ம் வகுப்பு மாணவர்களுக்கு இன்று (அக்டோபர் 3), 1 முதல் 5–ம் வகுப்புகளுக்கு அக்டோபர் 9–ம் தேதியும் பள்ளிகள் திறக்கப்பட உள்ளன. ஆசிரியர் இயக்கங்களின் இந்த போராட்டங்கள் தொடரும்பட்சத்தில் அது மாணவர்களின் கற்றலில் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கைகளுக்கு தமிழக அரசு விரைந்து தீர்வு காண வேண்டுமென கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம் இந்த போராட்டங்களுக்கு மையமாக இருப்பது திமுகவின் தேர்தல் வாக்குறுதிகள்தான். ஏனெனில், ஆசிரியர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளில் 85 சதவீதத்துக்கும் மேலானவை தேர்தல் வாக்குறுதிகள் அல்லது எதிர்க்கட்சியாக இருந்தபோது திமுக ஆதரவு தெரிவித்த அம்சங்களாக உள்ளன. இதனால் சாத்தியமற்ற கோரிக்கைகளைகூட ஆசிரியர் சங்கங்கள் முன்வைக்கும்போது கூட மறுக்க முடியாத நிலையில் இருப்பதாக பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். மறுபுறம் நாடாளுமன்றத் தேர்தலை முன்வைத்து தொடர் போராட்டங்கள் நடத்தப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

இது குறித்து தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் பி.பேட்ரிக் ரெய்மாண்ட் கூறியதாவது:

அதிமுகவின் 10 ஆண்டுகால ஆட்சியில் நடத்தப்பட்ட அனைத்து போராட்டங்களுக்கும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் ஆதரவு அளித்தார். சில போராட்டங்களுக்கு நேரில் வந்துகூட திமுக ஆட்சி அமைந்ததும் கோரிக்கை நிறைவேற்றப்படும் என தெரிவித்ததோடு, தேர்தல் வாக்குறுதியாகவும் அறிவித்தார். ஆனால், இரண்டரை ஆண்டுகால ஆட்சியில் திமுக சொன்ன பிரதான வாக்குறுதிகளில் எதையும் நிறைவேற்றவில்லை. ஓய்வூதியம் என்ற வார்த்தையை முதல்வர் மறந்தும்கூட சொல்வதில்லை.

இதுசார்ந்து பல போராட்டங்களை நடத்தியபோது உரிய நடவடிக்கை எடுப்பதாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் உறுதியளித்தார். ஆனால், இதுவரை ஒரு அறிவிப்புகூட அமலுக்கு வரவில்லை. இதனால் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டுள்ளோம். ஜாக்டோ- ஜியோவில் இருக்கும் சிலர் அரசுக்கு சாதகமாக செயல்படுகின்றனர். அதனாலேயே ஆசிரியர் அமைப்புகள் தனித்தனியாக போராட்டங்களை அறிவிக்கின்றன. குறிப்பாக ஆசிரியர்களுக்கு பணி பாதுகாப்பில்லாத சூழல் நிலவுகிறது. ஆசிரியர்கள் தாக்கப்பட்டால் கல்வி அமைச்சரிடம் இருந்து அறிக்கைகூட வருவதில்லை. இத்தகைய மனஅழுத்தமே எங்களை போராட்டத்தை நோக்கி நிர்பந்திக்கிறது”என்றார்.

இதேபோல் இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கப் பொதுச் செயலாளர் ஜே.ராபர்ட் கூறும்போது, “ஒரே கல்வித்தகுதி, ஒரே வேலை என்ற சூழலில் ஊதியம் மட்டும் வெவ்வேறு என்பதை ஏற்க முடியாது. ஊதிய முரண்பாட்டை களைய வலியுறுத்தி கடந்த 14 ஆண்டுகளாக தொடர்ந்து போராடி வருகிறோம். கடந்தாண்டு டிசம்பர் மாதம் நடத்தப்பட்ட போராட்டத்தில் தனிக்குழு அமைத்து சரிசெய்வதாக அரசு சார்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எங்கள் கோரிக்கை மீது முதல்வர் உறுதியான வாக்குறுதி வழங்கும் வரை போராட்டம் தொடரும்’ என்றார்.

இது குறித்து பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் வட்டாரங்களில் கேட்டபோது, “முதல்வரின் வழிகாட்டுதலின்படி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மற்றும் போராட்ட அறிவிப்பு வெளியிட்டுள்ள ஆசிரியர் சங்கங்களுடன் பேசி வருகிறோம். விரைவில் சுமூக தீர்வு எட்டப்படும்”என்றனர்.

# கந்தர்வகோட்டை ஒன்றிய இல்லம் தேடி கல்வி மையத்தில் காந்தியடிகள் பிறந்தநாள் கொண்டாட்டம்



கந்தர்வகோட்டை,அக்.03-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தரவகோட்டை ஒன்றியம் அரியாணிப்பட்டி இல்லம் தேடி கல்வி மையத்தில் காந்தியடிகள் பிறந்த நாளை மாணவர்கள் காந்தியடிகள் முக கவசம் அணிந்தும், காந்தியடிகள் வேடமிட்டும் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர், இந்நிகழ்வினை தன்னார்வலர் ராதிகா வரவேற்றார், இந்நிகழ்வில் கலந்து கொண்ட இல்லம் தேடி கல்வி மைய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் காந்தியடிகள் பிறந்தநாள் குறித்து பேசியதாவது

சுதந்திர இந்தியாவின் தேசப்பிதா என்று அழைக்கப்படுபவர் மகாத்மா காந்தி, இவரது முழுப்பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. 2 அக்டோபர் 1869 அன்று இந்திய நாட்டின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் எனும் ஊரில் பிறந்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார்.

நம்மை எதிர்ப்பவர்களை சண்டையிட்டு வெல்லாமல் அகிம்சையின் மூலமும் வெல்லலாம் என்பதனை நிரூபித்து காட்டியவர் காந்தி. இவர் பீகாரில் சத்தியகிரகம் எனும் முறையை வெற்றிகரமாக நடத்தினார். 1942 -ல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் காந்தி பெரும் பங்களிப்பு ஆற்றினார். 1947 -ல் இந்தியா சுதந்திரம் அடைய முக்கியமான ஒருவராக காந்தி இருந்தார்.

அறவழி போராட்டத்தின் மூலம் தென்னாபிரிக்காவில் வாழும் இந்தியர்களின் சமூக நிலையை உயர்த்தி அவரது முயற்சியில் வெற்றியை கண்டார்.

காந்திக்கு இரவீந்திரநாத் தாகூர் மகாத்மா என்ற பட்டத்தை வழங்கினார்.

இந்திய அரசியல் மட்டுமன்றி உலக மக்களுக்கும் உதாரணமான தலைவராக மகாத்மா காந்தி தன் வாழ்வில் சத்தியம், நேர்மை, அகிம்சை ஆகிய கொள்கைகளை கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய மகான் ஆவார் என்று பேசினார். இந்நிகழ்வில் தன்னார்வலர்கள் ஹேமா, காயத்ரி, புவனேஸ்வரி, மகேஸ்வரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை கைக்குறிச்சி வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கல்லூரி வளாகத்தில் உள்ள அண்ணல் மகாத்மா காந்தி சிலைக்கு கல்லூரியின் செயலாளர் பிகருப்பையா மற்றும் பொருளாளர் கவிஞர் ஆர்.எம்.வி கதிரேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், இந்நிகழ்வில் கல்லூரியினுடைய முதல்வர் ஜீவானந்தம் மற்றும் துறை பேராசிரியர்கள் கல்லூரி பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் காஞ்சிராங்குளம் ஊராட்சியில் பஞ்சாயத்து அலுவலகத்தில், தலைவர் மல்லிகா, துணைத் தலைவர் அய்யம்மாள் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்தல், சுகாதாரம் பேணுதல், திட, திரவு கழிவு மேலாண்மை செய்தல், தண்ணீரின் முக்கியத்துவம், நிலத்தடி நீரின் செறிவூட்டுதல், மகளிர்க்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குதல் மேலும் பல கோரிக்கைகளை வலியுறுத்தி முடிவெடுக்கப்பட்டது. உடன் விராதனூர் ஊராட்சி மன்றத் தலைவர் வாசுதேவன் தலைமையிலும், சோளங்குருணி ஊராட்சி மன்றத் தலைவர் மணிராஜ், துணைத் தலைவர் இருளாண்டி தலைமையிலும், உபத் தலைவர் பரமேஸ்வரி, காஞ்சிராங்குளம் ஊராட்சி தலைவர் மல்லிகா ராஜா மணி, துணைத்தலைவர் அய்யம்மாள் தர்மபுத்திரன் தலைமையிலும் நடைபெற்றது. இவர்களுடன் துணை தலைவர், செயலாளர்கள், பற்றாளர்கள், வார்டு கவுன்சிலர்கள் பொதுமக்கள்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வீரபாண்டிய கட்டபொம்மன்,மருது பாண்டியர்கள், தேவர் ஜெயந்தி விழாவிற்கு நேதாஜி சுபாஷ் சேனை சார்பாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதுகுறித்து மதுரையில் நடந்த கூட்டத்தில் நிறுவனர் வழக்கறிஞர் மகாராஜன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி பேசினார். இந்நிகழ்விற்கு மாநில செயலாளர் சுமன் முன்னிலை வகித்தார், இதில் மாநில மாவட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



தில்லித் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் அனைத்திந்திய தமிழ்ச் சங்கப் பேரவையின் செயல்தலைவர் இரா. முகுந்தன் 60வது பிறந்த நாள் விழாவினை தில்லி லோக் கலா மன்சில் நக்கீரர் தமிழ்ச் சங்கம் மற்றும் தில்லி தமிழ் அமைப்புகள் நடத்தியது. இவ்விழாவிற்கு தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சக்திபெருமாள் தலைமை வகித்தார், தில்லித் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் பெ. இராகவன் நாயுடு, மதுரை சிறுதூர் அ.சி.கபாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜார்கண்ட் உயர்நீதி மன்றத்தின் மேனாள் தலைமை நீதிபதி எம். கற்பக விநாயகம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார், நக்கீரர் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் இரா. பாஸ்கர் வரவேற்புரை வழங்கினார். தில்லித் தமிழ்ச் சங்கத்தின் பொருளாளர் எஸ். அருணாசலம் நன்றியுரை வழங்கினார். தில்லித் தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் உஷா வெங்கட் விழாவினை தொகுத்து வழங்கினார்.

# புதுக்கோட்டையில் மக்கள் ஒற்றுமை மேடை சார்பில் மகாத்மா காந்தி சிலைக்கு மரியாதை



புதுக்கோட்டை, அக்.3-

மகாத்மா காந்தியின் 154-ஆவதுபிறந்தநாளைமுன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மக்கள் ஒற்றுமை மேடையின் சார்பில் அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டதோட மக்கள் ஒற்றுமை உறுதிமொழி ஏற்கப்பட்டது.

புதுக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்வில் காங்கிரஸ் கட்சியின் மாநில செயலாளர் ஏ.சந்திரசேகரன், மக்கள் ஒற்றுமை மேடை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.அசோசன், சிபிஎம் நகரச் செயலாளர் ஆர். சோலையப்பன், காங்கிரஸ் நகரத்தலைவர் இப்ராஹிம்பாபு, முஸ்லீம் லீக் மாவட்டத் தலைவர் அஸ்ரப்அலி, திலகவதியார் ஆதீனம் தயானந்த சந்திரசேகரன், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்டத் தலைவர் டி.சலோமி, மாணவர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.ஜனார்த்தனன், வாசகர் பேரவை செயலாளர் பேரா.விஸ்வநாதன், அறிவியல் இயக்க மாநிலச் செயலாளர் எஸ்.டி.பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும் கந்தர்வகோட்டையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.சின்னதுரை, சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ.ராமையன், ஒன்றியச் செயலாளர்கள் வி.ரெத்தினவேல், கே.சித்திரைவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஆலங்குடியில் சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சு.மதியழகன், ஒன்றியச் செயலாளர் எல்.வடிவேல், நகரச் செயலளார் ஏ.ஆர். பாலசுப்பிரமணியன், காங்கிரஸ் நகரத் தலைவர் சக்திவேல், தமுஎகச மாவட்டக்குழு உறுப்பினர் ரமா.ராமநாதன், கிளைத் தலைவர் எஸ். முருகேசன், நேசன் மகதி, வாசகர் வட்டத் தலைவர் பாபுஜான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கறம்பக்குடியில் எவரெஸ்ட் சுரே~; தலைமையில் காங்கிரஸ் வட்டாரத் தலைவர் ஞானசேகரன், வியாபரிகள் சங்கத் தலைவர் சாந்திய மூர்த்தி, சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் த.அன்பழகன், அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் மு.முத்துக்குமார், இணைச் செயலாளர் சிவானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் காந்தி ஜெயந்தி கிராமசபை கூட்டங்கள்



அரியலூர்,அக்.3-

அரியலூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, கிராம சபை கூட்டங்கள் நடைபெற்றது.

அரியலூர் ஊராட்சி ஒன்றியம், உசேனாபாத் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு , ஊராட்சி மன்றத் தலைவர் வளர்மதி ஜெயராமன் தலைமை வகித்தார், ஒன்றியக்குழு துணைத் தலைவர் சரஸ்வதி ஜெயவேல் முன்னிலை வகித்தார், ஊராட்சி செயலாளர் செல்வகுமார் தீர்மானங்களை படித்தார், துணைத் தலைவர் ராமலிங்கம், வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கயர்லாபாத் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்ற, கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி மன்றத் தலைவர் சௌந்தர்ராஜன் தலைமை வகித்தார், துணைத் தலைவர் அமுதா குமரவேல் முன்னிலை வகித்தார், ஊராட்சி செயலாளர் இளங்கோவன் தீர்மானங்களை படித்தார், கூட்டத்தில் வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கல்லங்குறிச்சி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி தலைவர் ஆர்த்தி சிவகுமார் தலைமை வகித்தார், ஊராட்சி செயலாளர் தனபால் தீர்மானங்களை படித்தார். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கோவிந்தசாமி, வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

மணக்குடி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா அசோக்குமார் தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் தேசிங்குராஜா தீர்மானங்களை படித்தார். துணை தலைவர் பாப்பா, வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கடுகூர் ஊராட்சி மன்ற சேவை மைய கட்டிட வளாகத்தில் நடைபெற்ற, கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி மன்ற தலைவர் தர்மலிங்கம் தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் (பொறுப்பு) முருகேசன், தீர்மானங்களை படித்தார். துணைத்தலைவர் செந்தாமரை, வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

வஞ்சினபுரம் ஊராட்சி சேவை மைய கட்டிடத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் முருகேசன் தீர்மானங்களை படித்தார். துணைத் தலைவர் மஞ்சுளா, வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

ராயம்புரம் ஊராட்சி சேவை மைய வளாகத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி மன்ற தலைவர் ராஜகுமாரி தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் பார்வதி தீர்மானங்களை படித்தார். துணைத் தலைவர் வீராசாமி, வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

வாலாஜா நகரம் நடுநிலைப்பள்ளி வளாகத்தில், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு, ஊராட்சி மன்ற தலைவர் அபிநயா இளையராஜா தலைமை வகித்தார். ஊராட்சி செயலாளர் தமிழ் குமரன் தீர்மானங்களை படித்தார். துணைத் தலைவர் குணசேகரன், வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

# தென்காசியில் மகாத்மா காந்தியடிகள் பெருந்தலைவர் காமராஜர் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை




தென்காசி,செப்.3-

தென்காசி மாவட்டம் புளியங்குடி பேருந்து நிலையம் அருகில் அண்ணல் மகாத்மா காந்தியடிகளின்155-வதுஜெயந்தி விழாவும், பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜரின் 48-வது நினைவுதினத்தை முன்னிட்டு புளியங்குடி நகர திமுக சார்பிலும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பிலும், விஜய் மக்கள் இயக்கம், காந்தி மக்கள் இயக்கம் சார்பிலும் மாலைகள் அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

திமுக சார்பில் திமுக நகரச் செயலாளர் எ. அந்தோணிசாமி தலைமையில், வாசுதேவநல்லூர் எம்எல்ஏ சதன் திருமலை குமார் முன்னிலையில், திமுக அவைத்தலைவர் வேலுச்சாமி பாண்டியன், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், நகரப் பொருளாளர் காஜா மைதீன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, வழக்கறிஞர் அணி பிச்சையா, தகவல் தொழில் நுட்ப அணி ஆனந்தராஜ் ,முருகேசன் ஆசிரியர், மதிமுக நகரச் செயலாளர் சாகிர் உசேன், பால் குருசாமி, ஷேக் மைதீன், பண்டாரம், சுப்பு, குருராஜ், மாணவரணி சதீஷ், பாலசுப்பிரமணியம், பீர், மைதீன், பிச்சை, மீனாட்சிசுந்தரம், இளைஞர் அணி முருகேஷ், வஹாப், ஞான பண்டிதன், விவசாய அணி சேதுராமன், புளியங்குடி நகராட்சி சார்பாக மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர், புளியங்குடி நகர மன்றத் தலைவர் விஜயா சௌந்தர பாண்டியன், கமிஷனர், தூய்மை இந்தியா பணியாளர்கள், நகராட்சி ஊழியர்கள், விஜய் மக்கள் இயக்கம் மாநில பொருளாளர் புரூஸ்லி என். ஆனந்த் உத்தரவின் பேரில் மாவட்ட இளைஞரணி சார்பாக தலைவர் மாரியப்பன், துணைத் தலைவர் தவுடு முருமகேஷ், ரவி, சந்தோஷ், முகேஷ் சிவா, சுபாஷ், சிவபாரதிகடையநல்லூர் முகேஷ், அபிஷேக், புளியங்குடி மகாராஜா, ஆறுமுக ராஜா, காந்தி மக்கள் இயக்கம் சார்பாக பாலசுப்பிரமணியம் ஆசாரி, காங்கிரஸ் நகரத் தலைவர் பால்ராஜ், சமூக நல பேரொளி எ.ஸ். அருணாச்சலம் ஆகியோர் கலந்து கொண்டு காந்தி, காமராஜர் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# ஆலங்குடி அருகே கத்தியால் குத்தி ஓட்டுநர் கொலை – உறவினர் கைது

ஆலங்குடி, அக். 03-

ஆலங்குடி அருகே கீரமங்கலத்தில் மது அருந்தியபோது ஏற்பட்ட தகராறில் கத்தியால் குத்தியதில் டிராக்டர் ஓட்டுநர் உயிரிழந்தார். கொலை செய்த உறவினரை போலீஸார் கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கீரமங்கலம் அருகேயுள்ள வேம்பங்குடி மேற்கு பகுதியைச் சேர்ந்தவர் அடைக்கலம் மகன் அருள் (38).டிராக்டர் ஓட்டுநர், அதே ஊரைச் சேர்ந்தவர் செல்வம் மகன் ஆறுமுகம் (40). இருவரும் உறவினர்கள்.

இருவரும் கீரமங்கலம் சந்தைப்பேட்டை பகுதியில் மது அருந்தியபோது, இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதில், ஆறுமும் அருளை பலஇடங்களில் கத்தியால் குத்தியுள்ளார். இதில், பலத்த காயமடைந்த அருளை அருகில் இருந்தவர்கள் மீட்டு அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர், அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.தொடர்ந்து, கீரமங்கலம் போலீஸார் ஆறுமுகத்தைகைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சங்கரன்கோவில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்

# ரூ 63.54 லட்சத்தில் புதிய வகுப்பறைகள் கட்டும் பணி– எம்எல்ஏ ராஜா அடிக்கல் நாட்டினார்



சங்கரன்கோவில், அக்.3-

சங்கரன்கோவில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 63.54 லட்சம் செலவில் புதிதாக 3 வகுப்பறைகள் கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடந்தது நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியை தெய்வப்பிரியா தலைமை வகித்தார், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் ஜான் ஆசீர் ஒன்றிய செயலாளர் பெரியதுரை ,நகர செயலாளர் பிரகாஷ் மாவட்ட ஆதி திராவிடர் அணி அமைப்பாளர் கே.எஸ்.எஸ். மாரியப்பன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு புதிய வகுப்பறைகள் கட்டும் பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார், இதில் ஆசிரியர் நாராயணன் திருவேங்கடம் பேரூர் கழகச் செயலாளர் மாரிமுத்து, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் முருகராஜ், தகவல் தொழில்நுட்ப பிரிவு மணி, கணேஷ், நகரத் துணைச் செயலாளர்கள் முத்துக்குமார் , சுப்புத்தாய், வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, ராஜ், அன்சாரி திமுக வார்டு செயலாளர் வீராசாமி, மாணவர் அணி வீரமணி, ஒப்பந்ததாரர் ஜலால், விக்னேஷ் ,மாவட்ட ஆதி திராவிட நலக்குழு உறுப்பினர் சங்கர் ,ராமர், ஜான் ஜெயக்குமார் , பிரகாஷ்,குட்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டையில் பள்ளி மாணவி தூக்கிட்டு தற்கொலை – அதிர்ச்சியில் தாத்தாவும் பலி

கந்தர்வகோட்டை, அக்.3-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை கோவிலூர் கீழத் தெருவை சேர்ந்தவர் அடைக்கலம், இவர் இரண்டு சக்கரம் மோட்டார் வாகன பழுது நீக்கும் தொழில் செய்பவர் இவரது மகள் ஹர்ஷினி (14) இவர் கந்தர்வகோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வந்தார்.

இந்த நிலையில் மாணவியின் அண்ணன் ராஜசேகர் (15) நேற்று அதிக நேரம் சகோதரி தூங்கிக் கொண்டிருந்ததை கண்டித்ததாக கூறப்படுகிறது, இதில் மனம் உடைந்த மாணவி ஹர்ஷினி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து இறந்த மாணவியின் தாய் ரேவதி அளித்த புகாரின் பேரில் கந்தர்வகோட்டை காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து இறந்த மாணவியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்கு பதிவு செய்து மேல் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இறந்த மாணவியில் இறுதி ஊர்வலம் முடிந்த உடன் அவரின் தாத்தா சுப்பிரமணி (70) மன அழுத்தம் ஏற்பட்டு இறந்துபோனார், இச்சம்பவம் அப்பகுதி முழுவதையும் சோகத்தில் ஆழ்தியுள்ளது.

# கறம்பக்குடியில் வரத்து வாரி ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி விசிக டவர் கோபுரங்களில் ஏறி போராட்டம்



கறம்பக்குடி,அக்.03-

கறம்பக்குடியில் வரத்து வாரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி நீர் நிலைகளுக்கு வழிவகை செய்திட கோரி விசிகவினர் செல்போன் டவர் மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் பேரூராட்சிக்கு உட்பட்ட ராட்டினக்குளம், கோழிகுடப்புகுளம் ஆகிய குளங்களுக்கு வரும் நீர் வரத்து வாரிகள் மற்றும் சாலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி விசிக சார்பில் மாவட்ட ஆட்சியர், வருவாய்த்துறை பேரூராட்சி நிர்வாகத்திடம் மனு அளிக்கபட்டது, மனு மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, இது சம்பந்தமாக விசிக சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வரத்து வாரி ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கில் வரத்து வாரிகளின் ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி சென்னை உயர்நீதிமன்றம் 22.12. 2016 அன்று உத்தரவு பிறப்பித்தது, ஆனால் இன்று வரை ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை இதனால் ராட்டினகுளம், பறையன்குளம், பங்களா குளம், கோழி குடப்புக்குளம் ஆகிய குளங்களுக்கு வர வேண்டிய தண்ணீர் மழைநீர் மழைக்காலங்களில் கூட வருவதில்லை என்றும் தென்னகர் பகுதியில் முற்றிலும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் கடந்த காலங்களில் பலமுறை விசிக கட்சியின் சார்பில் பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தியும் இன்று வரை வரத்து வாரி ஆக்கிரமிப்புகளை அகற்ற தவறிய பேரூராட்சி நிர்வாகம் மற்றும் வருவாய் துறையினரை கண்டித்து கறம்பக்குடி விசிகவினர் தெற்கு ஒன்றிய செயலாளர் செல்வரெத்தினம் தலைமையில் முருகன் கோவில் பின்புறம் உள்ள செல்போன் டவர் மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனா்.

அசம்பாவிதங்கள் ஏற்படாத வண்ணம் காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர், மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையின் அடிப்படையில் போராட்டம் கைவிடப்பட்டது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

## ஆசிய விளையாட்டு போட்டிகள்

# ஸ்பீட் ஸ்கேட்டிங் 3000 மீட்டர் ரிலேவில் 2 வெண்கலம் வென்றது இந்தியா



**ஹாங்சோ : அக். 3,**

**ஆசிய விளையாட்டுப் போட்டியில் நேற்று காலை ஸ்பீட் ஸ்கேட்டிங் 3000 மீட்டர் ரிலேவில் 2 வெண்கலம் வென்றது இந்தியா. ஆடவர் மற்றும் மகளிர் இந்திய ஸ்கேட்டிங் அணியினர் வெண்கலம் வென்றுள்ளனர்.**

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 3 தங்கம் உள்பட 15 பதக்கங்களை இந்தியா வென்றிருந்தது. இந்த சூழலில் நேற்று காலை ஸ்பீட் ஸ்கேட்டிங் விளையாட்டில் இரண்டு வெண்கலம் வென்றுள்ளது இந்தியா.

சஞ்சனா பத்துலா, கார்த்திகா ஜெகதீஸ்வரன், ஹீரல் சாது மற்றும் ஆரத்தி கஸ்தூரி ராஜ் ஆகியோர் அடங்கிய மகளிர் அணியினரும், ஆர்யன் பால், ஆனந்த் குமார், சித்தாந்த், விக்ரம் ஆகியோர் அடங்கிய ஆடவர் அணியினரும் வெண்கலம் வென்றுள்ளனர்.

# டேபிள் டென்னிஸ் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றது இந்திய ஜோடி





**ஹாங்சோ : அக். 3,**

**ஆசிய விளையாட்டில் டேபிள் டென்னிஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் சுதித்ரா முகர்ஜி, ஆமிகா இந்திய ஜோடி வெண்கலப் பதக்கம் வென்றது.**

அரை இறுதிப் போட்டியில் கொரிய இணை வெற்றி பெற்றதை அடுத்து இந்திய-ஜோடிக்கு வெண்களம் கிடைத்தது. டேபிள் டென்னிஸ் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும்.

இந்தியாவுக்கு மேலும் ஒரு வெள்ளிப்பதக்கம் கிடைத்துள்ளது. மகளிர் நீளம் தாண்டுதல் பிரிவில் 6.63 மீட்டர் நீளம் தாண்டி ஆன்சி சோஜன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

மேலும் ஆக்கி ஆண்கள் முதல் நிலை குரூப் ஏ லீக் ஆட்டத்தில் இந்தியாவும் வங்காளதேசமும் மோதின. ஆட்டத்தின் துவக்கத்தில் இருந்தே இந்திய அணி அபாரமாக விளையாடியது. கோல்மழைபொழிந்த இந்திய அணி. -வங்காளதேசந்தை ஒரு கோல் கூட அடிக்க விடவில்லை. இதனால், இந்திய அணி 12-0 என்ற கோல் கணக்கில் வங்காளதேசத்தை பந்தாடி வெற்றியை ருசித்தது. இந்த வெற்றியின் மூலம் அரையிறுதிக்கு இந்திய அணி முன்னேறியுள்ளது.

# உலக கோப்பை கிரிக்கெட் அகமதாபாத்தில் 4ம்தேதி கோலாகல தொடக்க விழா

## கண்கவர் நடனம்,லேசர் ஷோவுக்கு ஏற்பாடு



**அகமதாபாத் : அக். 3,**

**13வது ஐசிசி உலக கோப்பை கிரிக்கெட் தொடர் வரும் 5ம் தேதி முதல் நவம்பர் 19ம்தேதி வரை இந்தியாவில் 10 நகரங்களில் நடைபெற உள்ளது.**

இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் உளபட 10 அணிகள் பங்கேற்கின்றன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோதும். இதில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

வரும் 5ம் தேதி அகமதாபாத்தில் நடைபெறும் முதல் போட்டியில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்து-நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்நிலையில் நாளை அகமதாபாத் நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் தொடக்க விழா கோலாகலமாக நடைபெற உள்ளது. நாளை மாலை 7 மணிக்கு தொடங்கும் பிரமாண்ட தொடக்க விழாவில் இந்திய பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் லேசர் ஷோ மற்றும் வாணவேடிக்கைகள் நடைபெறும். பாலிவுட் நட்சத்திரங்களின் நடன நிகழ்ச்சி நடைபெற பெற உள்ளது.

நடிகர் ரன்வீர்சிங், தமன்னாவின் நடன நிகழ்ச்சி, ஆஷா போஸ்லே, ஸ்ரேயா கோஷல், அரிஜித் சிங், சங்கர் மகாதேவன் ஆகியோர் பாடல்கள் பாடி ரசிகர்களை மகிழ்விக்க உள்ளனர். மேலும் 10 அணி கேப்டன்கள் அறிமுக நிகழ்ச்சியும் நடக்கிறது. 5ம் தேதி இங்கிலாந்து-நியூசிலாந்து போட்டிக்கு டிக்கெட் எடுத்துள்ள ரசிகர்கள் இந்த தொடக்கவிழாவில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர். மேடை உள்பட தொடக்க விழாவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. ஒத்திகை நிகழ்ச்சியுடன் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது.

# ஸ்டீபிள்சேஸ் போட்டியில் இந்தியாவுக்கு 2 பதக்கங்கள்




**ஹாங்சோ : அக். 3,**

**3 ஆயிரம் மீட்டர் ஸ்டீபிள்சேஸ் போட்டியில் இந்தியா 2 பதக்கங்களை வென்றுள்ளது.**

3 ஆயிரம் மீட்டர் ஸ்டீபிள்சேஸ் போட்டியில் இந்தியா 2 பதக்கங்களை வென்றுள்ளது. இந்தியாவின் பருல் சவுத்ரி வெள்ளியும், ப்ரீத்தி லம்பா வெண்கலப் பதக்கமும் வென்றனர். பருல் சவுத்ரி 9:27.63 நிமிடத்தில் இலக்கை எட்டி வெள்ளி பதக்கம் வென்றார். இதே போட்டியில் இந்தியாவின் ப்ரீத்தி லம்பா 9:43.32 நிமிடத்தில் இலக்கை எட்டி வெண்கலம் வென்றார்.

# மிரட்ட காத்திருக்கும் 5 வேகப்பந்து வீச்சாளர்கள் டேல் ஸ்டெயின் கணிப்பு



**கேப்டவுன் : அக். 3,**

**உலக கோப்பை கிரிக்கெட் திருவிழா தொடங்க இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில் ரசிகர்கள் மத்தியில் கிரிக்கெட் ஜுரம் தொற்றிக்கொண்டுள்ளது.**

சாம்பியன் பட்டம் வெல்லும் அணி எது, அதிகரன், அதிக விக்கெட் வீழ்த்தப்போவது யார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இந்நிலையில் தென்ஆப்ரிக்க முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின் உலக கோப்பையில் அசத்தப்போகும் 5 வேகப்பந்து வீச்சாளர்களை கணித்துள்ளார். அவர் கூறுகையில், பாகிஸ்தானின் ஷாகின்ஷா அப்ரிடி இந்திய அணி கேப்டன் ரோகித்சர்மாவுக்கு பெரும் சவாலாக இருப்பார்.

இருவரும் இதுவரை 3 ஒருநாள் போட்டிகளில் எதிர்கொண்டதில் 2 முறை அவுட் ஆக்கி உள்ளார். அப்ரிடியை தவிர தென்ஆப்ரிக்காவின் ககிசே ரபாடா,நியூசிலாந்தின்டிரென்ட் போல்ட், இங்கிலாந்தின் மார்க்வுட் , இந்தியாவின் முகமது சிராஜ் ஆகியோர் உலக கோப்பையில் சாதிக்கலாம். சிராஜ் பந்தை நன்றாக ஸ்விங் செய்கிறார். அவர் பெரிய பேட்டர்களை வீழ்த்துவார், இந்தியாவின் முக்கிய பவுலராக இருப்பார், என்றார். ஆனால் ஸ்டெயின் பும்ராவை 5 பேர் பட்டியலில் சேர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாறு சினிமா

# கவுண்டமணி படத்தில் நட்சத்திர வாரிசுகள்



**சென்னை : அக். 3,**

**கதையின் நாயகனாக கவுண்டமணி நடிக்கும் முழுநீள நகைச்சுவை படம், 'ஒத்த ஓட்டு முத்தையா'.**

யோகிபாபு, 'நான் கடவுள்' ராஜேந்திரன், தம்பி ராமய்யா, ரவிமரியா, சிங்கம்புலி, வையாபுரி, முத்துக்காளை, மாரிமுத்து, ஜான்சி ராணி, தாரணி, கூல் சுரேஷ், சென்ராயன், லேகாஸ்ரீ, சதீஷ், டி.கே.எஸ் நடிக்கின்றனர். சிங்கமுத்து மகன் வாசன் கார்த்திக், நாகேஷ் பேரன் கஜேஷ், மயில்சாமி மகன் அன்பு ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். கவுண்டமணி ஜோடியாக ராஜேஸ்வரி நடிக்கிறார். கோவை லட்சுமி ராஜன் மேற்பார்வையில் ஷஷி பிலிம்ஸ் தயாரிக்கிறது. ஹெக்டர் ஸ்ரீதர் ஒளிப்பதிவு செய்ய, சித்தார்த் விபின் இசை அமைக்கிறார்.

படம் பற்றி இயக்குனர் சாய் ராஜகோபால் கூறும் போது, '70க்கும் மேற்பட்ட படங்களில் கவுண்டமணி, செந்திலுக்கு நகைச்சுவை வசனங்கள் எழுதினேன். பிறகு பாண்டியராஜன், ஈஸ்வரி ராவ் நடித்த 'சுந்தரி நீயும் சுந்தரன் நானும்', சிம்ரனுடன் 'பாய்ஸ்' மணிகண்டன் நடித்த 'கிச்சா வயசு 16' ஆகிய படங்களை இயக்கினேன். இப்போது கவுண்டமணி நடித்து வரும் 'ஒத்த ஓட்டு முத்தையா' படத்தின் இரண்டு கட்டப் படப்பிடிப்பை நடத்தி இருக்கிறேன்' என்றார்.

# பிருத்விராஜ் சுகுமாரன் இயக்கத்தில் மோகன்லால் நடிக்கும் லூசிபர் 2



**சென்னை : அக். 3,**

**மலையாளத்தில் ஆசீர்வாத் சினிமாஸ் சார்பில் ஆண்டனி பெரும்பாவூர், லைகா புரொடக்ஷன்ஸ் சார்பில் சுபாஸ்கரன் இணைந்து தயாரிக்கும் பிரமாண்டமான படம், 'எம்புரான்'.**

கடந்த 2019ல் பிருத்விராஜ் சுகுமாரன் இயக்கத்தில் மோகன்லால் நடித்து ஹிட்டான படம் 'லூசிபர்'. இப்படம் கடந்த ஆண்டு மோகன் ராஜா இயக்கத்தில் சிரஞ்சீவி, நயன்தாரா நடிப்பில் 'காட்பாதர்' என்ற பெயரில் தெலுங்கில் ரீமேக் செய்யப்பட்டது. இதில் சல்மான்கான் சிறப்பு வேடத்தில் நடித்திருந்தார். தற்போது மலையாள 'லூசிபர்' படத்தின் 2வது பாகம், 'எம்புரான்' என்ற பெயரில் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. முரளி கோபி திரைக்கதை எழுத, சுஜித் வாசுதேவ் ஒளிப்பதிவு செய்கிறார். தீபக் தேவ் இசை அமைக்கிறார்.

சுரேஷ் பாலாஜி, ஜார்ஜ் ஃபயஸ் நிர்வாக தயாரிப்பாளர்களாக பணியாற்றுகின்றனர். இப்படம் மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் உருவாக்கப்படுகிறது. இப்படத்தின் மூலம் லைகா புரொடக்ஷன்ஸ் மலையாளப் படவுலகிற்கு செல்கிறது. லைகா புரொடக்ஷன்ஸின் தலைமைப் பொறுப்பை ஜி.கே.எம்.தமிழ்குமரன் ஏற்றுள்ளார். படம் குறித்து லைகா சுபாஸ்கரன் கூறுகையில், 'நேர்த்தியான முறையில் கதை சொல்லும் பாணி, அர்ப்பணிப்பு, கலாச்சார செறிவு கொண்ட கேரள மக்களின் குரலாக எதிரொலிக்கிறது, 'லூசிபர் 2 எம்புரான்'.

இப்படத்தின் மூலம் மலையாளத்தில் அறிமுகமாகும் வாய்ப்பு பெற்று இருக்கிறோம். இது திரைத்துறையின் வளர்ச்சியை விரிவுபடுத்துவது மட்டுமின்றி, நல்ல கதைகளை உலகளாவிய ரசிகர்களிடம் கொண்டு செல்வதையும் நோக்கமாக கொண்டது. இந்த முயற்சியில் எங்களுடன் இணைந்த ஆசீர்வாத் சினிமாஸுக்கு பெரிய நன்றி' என்றார்.

# பொங்கலுக்கு ரஜினியின் லால் சலாம் ரிலீஸ்




**சென்னை : அக். 3,**

**ஐஸ்வர்யா ரஜினிகாந்த் எழுதி இயக்கியுள்ள படம், 'லால் சலாம்'.**

லைகா புரொடக்ஷன்ஸ் சார்பில் சுபாஸ்கரன் தயாரித்துள்ளார். கிரிக்கெட் பின்னணியில் ஸ்போர்ட்ஸ் பிளஸ் ஆக்ஷன் படமாக உருவாகியுள்ள இதில், மொய்தீன் பாய் என்ற சிறப்புத்தோற்றத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ளார். கதையின் நாயகர்களாக விஷ்ணு விஷால், விக்ராந்த் நடித்துள்ளனர்.

முக்கிய வேடங்களில் ஜீவிதா, நிரோஷா, தம்பி ராமய்யா நடித்துள்ளனர். ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைத்துள்ளார். விஷ்ணு ராமசாமி ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் ஷூட்டிங் முடிந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையில், வரும் பொங்கல் பண்டிகைக்கு 'லால் சலாம்' படம் திரைக்கு வருகிறது என்று, லைகா புரொடக்ஷன்ஸ் அறிவித்துள்ளது.

# சிவகார்த்திகேயனின் 'அயலான்' டீசர் அக்.6ஆம் தேதி ரிலீஸ்



**சென்னை : அக். 3,**

**சிவகார்த்திகேயன் நடிக்கும் 'அயலான்' படத்தின் டீசர் வரும் அக். 6ஆம் தேதி வெளியாகிறது.**

ஆர்.ரவிகுமார் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள படம் 'அயலான்'. கடந்த 2018-ம் ஆண்டு தொடங்கிய இப்படத்தை 24 ஏஎம் ஸ்டுடியோஸ் மற்றும் கேஜேஆர் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ளது. ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைத்துள்ளார். ரகுல் ப்ரீத் சிங், ஷரத் கேல்கர், இஷா கோப்பிகர், பானுப்ரியா, யோகி பாபு, கருணாகரன், பால சரவணன் ஆகியோர் இதில் நடித்துள்ளனர்.

கிராபிக்ஸ் பணிகளில் ஏற்பட்ட தாமதத்தால் இப்படத்தின் வெளியீடு தொடர்ந்து தள்ளிவைக்கப்பட்டுக் கொண்டே இருந்தது. 4500-க்கும் மேற்பட்ட VFX காட்சிகளைக் கொண்ட இந்திய சினிமாவின் முதல் முழு நீள திரைப்படம் என்பதால் இப்படத்தின் கிராபிக்ஸ் பணிகள் தொடர்ந்து இழுபறியாகவே இருந்து வந்தது. ஒருவழியாக இப்படம் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வெளியாக இருப்பதாக படக்குழு அண்மையில் அறிவித்தது.

இந்த நிலையில், 'அயலான்' படத்தின் டீசரை வரும் அக். 6ஆம் தேதி படக்குழு வெளியிட இருக்கிறது. இதற்கான பணிகள் தற்போது நடந்து வருவதாக இயக்குநர் ரவிகுமார் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். ஏ.ஆர்.ரஹ்மானின் ஸ்டுடியோவில் டீசருக்கான பின்னணி இசை சேர்ப்பு பணிகள் நடந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றையும் அவர் பகிர்ந்துள்ளார்.

# 'லியோ' ட்ரெய்லர் அக்.5ல் வெளியாகிறது படக்குழு அதிகாரபூர்வ அறிவிப்பு



**சென்னை : அக். 3,**

**விஜய் நடித்துள்ள 'லியோ' படத்தின் ட்ரெய்லர் வரும் அக்.5 அன்று வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.**

விஜய் நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள படம் 'லியோ'. இந்தப் படத்தில் த்ரிஷா, சஞ்சய் தத், அர்ஜுன், பிரியா ஆனந்த், மிஷ்கின், கவுதம் வாசுதேவ் மேனன், மன்சூர் அலி கான் ஆகியோர் நடித்துள்ளனர். இந்தப் படத்தை செவன் ஸ்க்ரீன் ஸ்டுடியோ தயாரிக்கிறது. வரும் அக்டோபர் 19-ம் தேதி திரையரங்குகளில் இப்படம் வெளியாக உள்ளது.

விஜய்யின் பிறந்த நாளான கடந்த ஜுன் 22 ஆம் தேதி 'லியோ' படத்தின் முதல் சிங்கிளான 'நான் ரெடி' பாடலை படக்குழு வெளியிட்டது. இந்தப் பாடலை அனிருத் இசையில் நடிகர் விஜய், அனிருத், அசல் கோலார் ஆகியோர் பாடியுள்ளனர். பாடல் வரிகளை விஷ்ணு எடவன் எழுதியுள்ளார். இப்பாடல் நல்ல வரவேற்பை பெற்றது. சமீபத்தில் இப்படத்தின் மற்றொரு பாடலான 'Badass' வெளியானது. படத்தின் ட்ரெய்லர் எப்போது வெளியாகும் என்று ரசிகர்கள் தொடர்ந்து படக்குழுவிடம் கேள்வி எழுப்பி வந்த நிலையில் வரும் அக்.5 ஆம் தேதி படத்தின் ட்ரெய்லர் வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

# விமானப் படை அதிகாரியாக கங்கனா நடித்திருக்கும் 'தேஜஸ்'

## அக்.27ல் ரிலீஸ் ஆகிறது



**மும்பை : அக். 3,**

**விமானப் படை அதிகாரியாக கங்கனா நடித்திருக்கும் 'தேஜஸ்' திரைப்படம் வரும் அக். 27 ஆம் தேதி வெளியாகவுள்ளது.**

சர்வேஷ் மேவாரா இயக்கத்தில் கங்கனா ரணாவத் நடித்துள்ள படம் 'தேஜஸ்'. 2016 ஆம் ஆண்டு இந்திய விமானப் படை வரலாற்றில் முதல் முறையாக போர் விமானங்களை இயக்குவதற்கு 3 பெண் விமானிகள் நியமிக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பனை கலந்து இப்படம் உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது. கடந்த 2020 ஆம் ஆண்டே தொடங்கப்பட்ட இப்படம் பல்வேறு காரணங்களால் தாமதமானது.

இப்படத்தின் படப்பிடிப்புப் பணிகள் முடிந்து தற்போது இறுதிகட்டப் பணிகள் நடந்து வருகிறது. இந்த சூழலில் இப்படத்தின் டீசரை படக்குழு இன்று வெளியிட்டுள்ளது. அதில் விமானப் படை விமானி உடையில் கங்கனா போர் விமானம் ஒன்றில் புறப்படுவது போன்ற சிறிய கிளிம்ப்ஸ் காட்டப்படுகிறது. இப்படம் இம்மாதம் 27ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்று படக்குழு தெரிவித்துள்ளது. ஏற்கெனவே இப்படம் 20ஆம் தேதி வெளியாகும் என்று கூறப்பட்ட நிலையில், தற்போது இப்படம் ஒருவாரம் தள்ளிவைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஒயின் ஷாப் மோதல் கதை சாலா

**சென்னை : அக். 3,**

**பீப்பிள் மீடியா பேக்டரி சார்பில் டி.ஜி. விஸ்வ பிரசாத், விவேக் குச்சிபோட்லா இணைந்து தயாரித்துள்ள படம், 'சாலா'.**

இது ரஸ்டிக் அன்ட் ரியலிஸ்டிக் திரில்லர் படமாக உருவாகியுள்ளது. தீவிரமான மதுப்பழக்கம் காரணமாக சமூகத்தில் நடந்து வரும் பல்வேறு பிரச்னைகள் குறித்து இப்படம் பேசுகிறது. ஒயின் ஷாப் ஒன்றை குத்தகைக்கு எடுக்கும் விஷயத்தில் இரண்டு குழுக்களுக்கு இடையே ஏற்படும் மோதல் மற்றும் அதற்குப் பிறகான பகை குறித்து இப்படம் சொல்கிறது.

எஸ்.டி.மணிபால் எழுதி இயக்கிஇருக்கிறார். இவர் 'தொடரி', 'காடன்', 'கும்கி 2' போன்ற படங்களில் பிரபு சாலமனிடம் இணை இயக்குனராகப் பணியாற்றியவர். சாலமன் என்கிற சாலா கேரக்டரில் தீரன் நடித்துள்ளார். மற்றும் ரேஷ்மா, சார்லஸ் வினோத், நாத், அருள்தாஸ், சம்பத் ராம் நடித்துள்ளனர். ரவீந்திர நாத் குரு ஒளிப்பதிவு செய்துள்ளார். தீசன் இசை அமைத்துள்ளார். டிரைடென்ட் ஆர்ட்ஸ் சார்பில் ஆர்.ரவீந்திரன் இப்படத்தை வெளியிடுகிறார்.



வரலாறு உலகம்

## லண்டன் அருங்காட்சியகத்திலிருந்து

### சத்ரபதி சிவாஜியின் புலி நக ஆயுதம் இந்தியா கொண்டு வரப்படுகிறது



**லண்டன் : அக். 3,**
**மகாராஷ்டிராவில் சத்ரபதி சிவாஜி முடிசூட்டு விழாவின் 350-வது ஆண்டு நிறைவு இந்தாண்டு இறுதியில் கொண்டாடப்படுகிறது.**

கடந்த 1659-ம் ஆண்டு பிஜாபூர் சுல்தானின் தளபதியாக இருந்த அப்சல் கானை சிவாஜி புலி நகத்தை பயன்படுத்தி கொன்றதாக நம்பப்படுகிறது. இரும்பினாலான இந்த புலி நகம் பின்னர் கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரியாக நியமிக்கப்பட்ட ஜேம்ஸ் கிராண்ட் டுப் வசம் மராத்தாவின் கடைசிய பெஷாவராக இருந்த பாஜி ராவ்-II 1818ல் சரண்டைந்த போது ஒப்படைக்கப்பட்டு, பின்னர் விக்டோரியா அண்ட் ஆல்பர்ட் அருங்காட்சியகத்துக்கு பரிசளிக்கப்பட்டு அங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மகாராஷ்டிராவில் கண்காட்சியில் வைப்பதற்காக 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் சிவாஜியின் புலி நக ஆயுதம் நவம்பரில் இந்தியா கொண்டு வரப்பட இருக்கிறது. இது தொடர்பாக, விக்டோரியா அண்ட் ஆல்பர்ட் அருங்காட்சியத்தின் இயக்குநர் டிரிஸ்டன் ஹண்டை சந்தித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மகாராஷ்டிர கலாச்சாரத் துறை அமைச்சர் சுதீர் முங்கண்டிவார் நாளை லண்டன் செல்கிறார்.

## கனடா ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கம் பேச்சு சுதந்திரத்தை நசுக்க முயற்சி எலான் மஸ்க் குற்றச்சாட்டு



**வாஷிங்டன் : அக். 3,**
**கனடாவில் உள்ள ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கம் பேச்சு சுதந்திரத்தை நசுக்க முயற்சி செய்கிறது என 'எக்ஸ்' சமூக வலைதள நிறுவன தலைவர் எலான் மஸ்க் குற்றம் சாட்டி உள்ளார்.**

இந்தியா-கனடா இடையிலான மோதலுக்கு இடையில் கனடாவிற்கு எதிராக கடுமையான விமர்சனங்களை எக்ஸ் நிறுவன தலைவர் எலான் மஸ்க் வைத்துள்ளார். இது தொடர்பாக, எலான் மஸ்க் கூறியிருப்பதாவது கனடாவில் கடுமையாக கருத்து சுதந்திரத்திற்கு எதிரான சட்டங்கள் உள்ளன உலகிலேயே கருத்து சுதந்திரத்தை முடக்கும் அடக்கும் அரசுகளில் ஒன்றாக ஜஸ்டின் ட்ரூடோ அரசு உள்ளது.

சமீபத்தில் ஆன்லைன் ஸ்ட்ரீமிங் நிறுவனங்களுக்கு எதிராக கூட அவர்கள் சட்டம் கொண்டு வந்துள்ளனர். உலகிலேயே மிக மோசமான கருத்து சுதந்திரத்திற்கு எதிராக விதிகளை கொண்டு வந்துள்ளனர். முக்கியமாக ஜஸ்டின் ட்ரூடோ கனடாவில் இருக்கும் மக்களின் கருத்து சுதந்திரத்தை நொறுக்கிக்கொண்டு இருக்கிறார் என்று மஸ்க் கூறியுள்ளார்.

## 10 ஆண்டுகளுக்கு பிறகு லிபியா–இத்தாலி இடையே நேரடி விமான சேவை



**திரிபோலி : அக். 3,**
**10 ஆண்டுகளுக்கு பிறகு லிபியா-இத்தாலி இடையே நேரடி விமான சேவை தொடங்க முடிவு செய்யப்பட்டது.**

ஆப்பிரிக்க நாடான லிபியாவின் முன்னாள் அதிபர் முகமது கடாபி. சர்வாதிகாரியான இவர் கடந்த 2011-ம் ஆண்டு அங்குள்ள கிளர்ச்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டார். இதனையடுத்து லிபியா உடனான விமான போக்குவரத்துக்கு இத்தாலி மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன.

இந்தநிலையில் லிபிய விமான நிறுவனமான மெட்ஸ்கி ஏர்வேஸ் மூலம் இத்தாலிக்கு மீண்டும் நேரடி விமான சேவை தொடங்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி லிபியா தலைநகர் திரிபோலியில் உள்ள மிட்டிகா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இத்தாலியின் பியூமிசினோ விமான நிலையத்துக்கு எம்.டி-522 என்ற விமானம் இயக்கப்பட்டது. 12 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தொடங்கப்பட்ட இந்த விமான சேவைக்கு லிபியா பிரதமர் அப்துல் ஹமீத் டிப்பா பாராட்டு தெரிவித்துள்ளார்.

## அதிகரிக்கும் வெப்பத்தால் நூற்றுக்களாக்கான டால்பின்கள் பலி

### சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை



**பிரேசில் : அக். 3,**
**பிரேசில் நாட்டின் வடமேற்கில் தொடங்கி கொலம்பியா, பெரு உட்பட பல தென் அமெரிக்க நாடுகள் வரை பரவியுள்ளது அமேசான் மழைக்காடு.**

வடக்கு பிரேசிலில் அமேசோனாஸ் மாநிலத்தின் தலைநகரமான மனோஸ் நகருக்கருகே உள்ளது டெஃப் பிராந்தியம். இப்பகுதியிலும் அமேசான் காடுகள் பரவியுள்ளது. இப்பகுதி முழுவதிலும் சமீப காலமாக பெரும் வறட்சி ஏற்பட்டுள்ளது. நீர் நிலைகளில் வெப்பம் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. ஒரு சில இடங்களில் வெப்பம் 102 டிகிரி ஃபேரன்ஹீட் அளவை தொட்டு விட்டது.

இதன் காரணமாக இங்குள்ள டெஃப் ஏரியில் நூற்றுக்கணக்கான டால்பின்கள் உயிரிழந்து மிதக்கின்றன. இத்தகைய சம்பவம் இதற்கு முன்பு நடைபெறாதது. டால்பின் மீன்கள் இறந்ததற்கும் அதிகளவு வெப்பத்திற்கும் உறுதியான தொடர்புள்ளது. ஆனால், வெப்பநிலை அதிகரிப்பதற்கான காரணத்தை இதுவரை கண்டறிய முடியவில்லை என பிரேசில் அறிவியல் துறையின் ஆதரவில் இயங்கும் மமிரவா நிறுவனம் தெரிவித்துள்ளது.

உயர்ந்து வரும் வெப்ப நிலை காரணமாக அமேசான் காடுகளில் உள்ள நீர்மட்டமும் குறைந்து கொண்டே வருகிறது. பரப்பளவில் கிட்டத்தட்ட ஆஸ்திரேலியாவின் அளவிற்கு பரந்து விரிந்துள்ள இக்காடுகளில் இது போன்ற வானிலை நிகழ்வுகள் நடைபெறுவதால் 1 லட்சம் பேருக்கும் மேற்பட்டோரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இயற்கைக்கு எதிரான பல நடவடிக்கைகளில் மனிதர்கள் ஈடுபட்டு வருவதால் இது போன்ற விசித்திரமான பருவநிலை மாற்றங்கள் ஏற்படலாம் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்து வந்தனர். இந்த நிகழ்வு அதனை உறுதிப்படுத்துவதாக உள்ளதாக சமூக வலைதளங்களில் கருத்து நிலவுகிறது.

## ஸ்லோவாக்கியா நாடாளுமன்ற தேர்தல் முன்னால் அதிபரே மீண்டும் வெற்றி



**பிராடிஸ்லாவா : அக். 3,**
**கிழக்கு ஐரோப்பியாவில் உள்ள சிறிய நாடுகளின் ஒன்றான ஸ்லோவாக்கியாவில் சமீபத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் அந்த நாட்டின் முன்னால் அதிபரே மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.**

கடந்த 1993ல் செக்கோஸ்லோவாக்கியா பிரிவினைக்கு பிறகு உருவான சிறிய நாடு ஸ்லோவாக்கியா. அதன் மக்கள் தொகை சுமார் 55 லட்சம். கடந்த மே மாதத்திலிருந்து அங்கு காபந்து அரசு ஆட்சி செய்து வந்தது. சமீபத்தில் அங்கு பொதுத்தேர்தல் நடந்த நிலையில் அதில் முன்னால் அதிபரும் இடதுசாரி ஸ்மெர் கட்சி தலைவருமான ராபர்ட் பிகோ (59) வெற்றி பெற்றுள்ளார்.

அவர் கடந்த 2018ல் அவரது ஆட்சியில் நடந்த ஊழல்களை பகிரங்கமாக வெளிப்படுத்தியதாக பத்திரிக்கையாளர் குசியாக் என்பவரை கொன்ற வழக்கில் அதிபர் பதவியிலிருந்து விலகினார்.

முந்தைய ஆட்சிகளில் ரஷ்யா, உக்ரைன் போரில் உக்ரைனுக்கு ஸ்லோவாக்கியா ராணுவ உதவியை அளித்தது. போர் அகதிகளாக வரும் உக்ரைன் மக்களுக்கு ஆதரவும் அளித்தது. இந்த நிலையில் ராபர்ட் பிகோ தான் வென்றால் உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு ஆதரவும், அமெரிக்க எதிர்ப்பும், உக்ரைனுக்கு ராணுவ உதவியை நிறுத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளார். ஊழல் பின்னணி கொண்ட அவரது வெற்றி ஸ்லோவாக்கியாவுக்கு கெட்ட செய்தி என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

## தற்கொலை படை தாக்குதல் எதிரொலி

### தீவிரவாத அச்சுறுத்தல்களை வேரறுப்போம் பாக். ராணுவ தளபதி சபதம்



**இஸ்லாமாபாத் : அக். 3,**
**ராணுவ நடவடிக்கையின் மூலம் தீவிரவாத அச்சுறுத்தல்களை அகற்றுவோம் என பாகிஸ்தான் ராணுவ தளபதி சையது அசீம் முனிர் சபதம் எடுத்துள்ளார்.**

பாகிஸ்தானின் பலுச்சிஸ்தான் மாகாணத்தின் மஸ்துங் மாவட்டத்தில் உள்ள மதினா மசூதி அருகே கடந்த 28ம் தேதி பயங்கர தற்கொலைப்படை தாக்குதல் நிகழ்ந்தது. குண்டுவெடிப்பு சம்பவத்தில் 60 பேர் உயிரிழந்தனர். மேலும் 60 பேர் படுகாயமடைந்தனர். மிலாடி நபியை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்புத் தொழுகைக்காக ஏராளமானோர் திரண்டிருந்த நிலையில், இந்த குண்டுவெடிப்பு நடந்தது. அதே நாளில் கைபர் பக்துன்வா மாகாணம் ஹாங்கு நகரில் உள்ள போலீஸ் நிலையத்துக்கு அருகே உள்ள மசூதியில் நடந்த குண்டுவெடிப்பில் 5 பேர் உயிரிழந்தனர். 12 பேர் படுகாயமடைந்தனர்.

இரட்டை வெடிகுண்டு தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. இந்நிலையில், குவெட்டாவில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் அந்நாட்டின் ராணுவ தளபதி சையது ஆசிம் முனீர் பேசுகையில், இஸ்லாமுடன் எந்த தொடர்பும் இல்லாதவர்கள் கொடூரமான தாக்குதலை நிகழ்த்தியுள்ளனர். தீவிரவாதத்துக்கு ஆதரவளிப்பவர்களின் உதவியுடன் இத்தகைய செயலை அரங்கேற்றியுள்ளனர். இந்த தீய சக்திகள் அரசு மற்றும் பாதுகாப்பு படையின் முழு பலத்தையும் எதிர்கொள்வார்கள். நாட்டில் இருந்து தீவிரவாத அச்சுறுத்தல்களை வேரறுக்கும் வரையில் ஓயமாட்டோம்'' என்றார்.

## அரசு ரகசியங்களை வெளிப்படுத்திய வழக்கில் இம்ரான்கானை குற்றவாளியாக அறிவித்தது நீதிமன்றம்



**இஸ்லாமாபாத் : அக். 3,**
**அரசு ரகசியங்களை வெளிப்படுத்திய வழக்கில் இம்ரான்கானை குற்றவாளியாக நீதிமன்றம் அறிவித்தது.**

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மற்றும் அவரது உதவியாளர் முகமது குரேஷி ஆகியோர் மீது அரசு ரகசியங்களை வெளிப்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டது. சைபர் வழக்கு என அறியப்படும் இந்த வழக்கு விசாரணை பாகிஸ்தானின் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு உறுதியானதால் இருவரையும் குற்றவாளிகள் என நீதிமன்றம் அறிவித்தது. இம்ரான்கான் ஏற்கனவே தோஷகாளா ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மெக்சிகோ தேவாலயத்தில் மேற்சுவர் இடிந்து விழுந்து 9 பேர் பலி இடிபாடுகளில் சிக்கிய 30 பேரை தேடி மீட்கும் பணி தீவிரம்



**மெக்சிகோ : அக். 3,**
**மெக்சிகோவில் உள்ள ஆலயத்தில் மேல் சுவர் இடிந்து விழுந்து வழிபாட்டில் கலந்துகொண்டவர்களில் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

வடக்கு மெக்சிகோவில் உள்ள ஆலயத்தில் மேல் சுவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனையின் போது திடீரென இடிந்து விழுந்தது. இதில் வழிபாட்டில் கலந்துகொண்ட பலர் சிக்கிக் கொண்டனர். தகவல் அறிந்து அங்கு விரைந்த ராணுவத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதில் 9 பேர் உயிரிழந்த நிலையில் 30 பேர் இடிபாடுகளில் சிக்கி தவிப்பதாக தெருவிக்கப்பட்டது.

அவர்களை மீட்கும் பணியில் தன்னார்வர்களுடன் சேர்ந்து ராணுவத்தின் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். முன்னதாக இடிபாடுகளில் சிக்கியவர்களின் சத்தத்தை துல்லியமாக அறிந்து அங்கு சிக்கியிருப்பவர்களை மீட்கும் வகையில் அங்கிருந்தவர்களை பாதிரியார் அமைதி படுத்தினார். அவரது அறிவுரைக்கு இணங்க அழுதுகொண்டிருந்த பலர் கைகளை மேல் உயர்த்தி ஒற்றுமையை காண்பித்து அமைதி படுத்தினர்.

## லால் பகதூர் சாஸ்திரி திருவுருவ சிலை எல்.முருகன் மலர்தூவி மரியாதை



**தாஷ்கண்ட்: அக். 3,**
**உஸ்பெகிஸ்தானுக்கு மத்திய அமைச்சர் எல். முருகன் அரசு முறை பயணமாக சென்றுள்ளார்.**

முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்ட்து.

பிறந்தநாளையொட்டி, தாஷ்கண்ட நகரில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி பள்ளியில் அமைந்துள்ள லால் பகதூர் சாஸ்திரியின் திருவுருவ சிலைக்கு மத்திய அமைச்சர் எல்.முருகன் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

## நைஜீரியாவில் இறுதி ஊர்வலத்தின் போது துப்பாக்கி முனையில் 25 பேர் கடத்தல்



**அபுஜா : அக். 3,**
**நைஜீரியா நாட்டின் தென்மேற்கு மாகாணமான ஒட்டோவில் இறுதிச்சடங்கு ஊர்வலம் நடைபெற்றது.**

இதில் உயிரிழந்தவரின் உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். அப்போது திடீரென பயங்கர ஆயுதங்களுடன் வந்த மரம நபர்கள் அவர்களை சுற்றி வளைத்தனர்.

இதனையடுத்து துப்பாக்கி முனையில் சுமார் 25 பேரை அவர்கள் கடத்தி சென்றதாக கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் யார், எதற்காக கடத்தினார்கள் என்பது இன்னும் தெரியவில்லை. எனவே போலீசார் வழக்கு பதிவு செய்து அவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## மருத்துவத்திற்கான நோபல் பரிசு 2 பேருக்கு அறிவிப்பு




**வாஷிங்டன் : அக். 3,**
**மருத்துவத்திற்கான நோபல் பரிசு 2 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்காவை சேர்ந்த கட்டாலின் கரிக்கோ. ட்ரூ வைஸ்மேன் ஆகியோருக்கு இந்த ஆண்டின் மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பூசி உற்பத்தியில் முக்கிய பங்கு வகித்த இருவருக்கும் மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப் பட்டுள்ளது.

## காணாமல் போன சிறுமி முடுக்கி விடப்பட்ட மிகப்பெரும் தேடுதல் வேட்டை



**அமெரிக்கா : அக். 3,**
**அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ளது சரடோகா கவுன்டி பகுதி.**

இங்கு சுமார் 6250 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. மோரு ஏரி மாநில பூங்கா எனப்படும் இயற்கை எழில் மிகுந்த சிறிய வனப்பகுதி. இயற்கை காட்சிகளும், பெரிய ஏரியும், அழகான மரங்களை கொண்ட அடர்ந்த காடுகளும் உள்ளதால் இப்பகுதிக்கு பொழுதுபோக்கவும், அங்கேயே தற்காலிக கூடாரம் அமைத்து சுற்றி பார்க்கவும் மக்கள் வருவது வழக்கம்.

அவ்வாறு சில தினங்களுக்கு முன் பொழுது போக்க ஒரு குடும்பத்தினர் தங்கள் மகளுடன் வந்திருந்தனர். சார்லோட் சேனா எனும் அவர்களின் 9 வயது மகள் தனது சைக்கிளில் சுற்றி வர கிளம்பினார். கிளம்பி சென்றும் நீண்ட நேரம் திரும்பி வராததால் அவள் பெற்றோர் கவலையடைந்தனர்.

அச்சிறுமியின் தாய் த்ரிஷா. அவசர சேவை எண் 911-ஐ தொடர்பு கொண்டு தெரிவித்ததின் பேரில் காவல்துறையினர் விரைந்து வந்து தேடுதல் வேட்டையினை தொடங்கினர்.

விசாரணையில் அச்சிறுமியை அங்குள்ள லூப் ஏ பகுதியில் கடைசியாக அவள் அணிந்திருந்த ஆரஞ்சு நிற சட்டை, கருநில பேண்ட், கருப்புநிறக்ராக் காலணியுடன் கண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அதற்கு பிறகு என்னவானார் என தெரியவில்லை.

இது குறித்து நியூயார்க் நகர கவர்னர் கேதி ஹோசல் தெரிவித்ததாவது:

அச்சிறுமியை தேடும் பணியில் 75 காவல்துறை அதிகாரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் ஈடுபட்டு வருகின்றனர். நியூயார்க் காவல்துறை அதிகாரிகள். மோப்ப நாய்கள், விமான சேவை. வேட்டை நாய்கள் என அனைத்துவிதமான வளத்தையும் இந்த தேடுதலில் ஈடுபடுத்தியுள்ளோம். பல்வேறு சிறப்பு அதிகாரிகளும் இதில் பங்கு பெற்றுள்ளனர். டிரோன் சேவை. மற்றும் நீருக்கடியில் சென்று மீட்கும் படை சேவை உட்பட எல்லாவித வளங்களையும் உபயோகபடுத்தியுள்ளோம்.

பூங்காவில் அச்சிறுமி காணாமல் போன போது பரிமாறி கொள்ளப்பட்ட செய்திகள் குறித்தும் ஆராய நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். எந்த சிறு விஷயத்தையும் அலட்சியப்படுத்தாமல் தேடி வருகிறோம் என்று கவர்னர் கேதி ஹோசல் தெரிவித்தார்.

5 அடி 1 அங்குலம் உயரமும் 40 கிலோ எடையும் உள்ள அச்சிறுமியின் புகைப்படத்தை வெளியிட்ட காவல்துறை, பொது மக்களின் ஒத்துழைப்பையும் கோரியுள்ளது, அப்பகுதி முழுவதும் ஆம்பர் எச்சரிக்கை எனப்படும் குழந்தைகள் கடத்தல் குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# நோபல் பரிசு: கரோனா தடுப்பூசி கண்டுபிடிப்புக்கு காரணமான கடாலின் கரிகோ, ட்ரூவ் தேர்வு

# காங்கிரஸ்: ராஜஸ்தானை சீரழித்துவிட்டது பாஜக பொதுக்கூட்டத்தில் பிரதமர் சாடல்





# போராட்டங்களை முன்னெடுக்கும் ஆசிரியர்கள் : அதிர்ச்சியில் தமிழக அரசு


சென்னை / புதுக்கோட்டை | 03.10.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

வரலாற்றில் இன்று



# இன்றைய பிறந்த நாள்

வி. பி. இராமன் , தமிழக அரசியல்வாதி (பி.1932) (இ.1991)



குருசரண் தாஸ் , இந்திய எழுத்தாளர் (பி.1943)



சேடபட்டி இரா. முத்தையா , தமிழக அரசியல்வாதி (பி.1945)



சத்யராஜ் , தமிழ்த் திரைப்பட நடிகர் (பி.1954)



# இன்றைய நினைவு நாள்

கடம்பினி கங்கூலி , இந்திய மருத்துவர் (பி.1861) (இ.1923)



கந்தையா கனகரத்தினம் , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி.1892) (இ.1962)



ம. பொ. சிவஞானம் , தமிழக எழுத்தாளர், அரசியல்வாதி (பி.1906) (இ.1995)

